# சோஷலிஸம்

அக்: 10
1981

சோவியத் மாசிகை

# தத்துவமும் நடைமுறையும்

இன்றைய உலகில்
பாட்டாளிவர்க்க சர்வதேசியம்

★

சோவியத்தில் ஒரு கட்சிமுறை
இருப்பது ஏன்?

★

வளர்முக நாடுகளில் தேசிய
ஜனநாயக முன்னணிகள்

★

ஏகாதிபத்தியமே பின்தங்கலுக்கான
முழுப் பொறுப்பாளி

58

...VINAYAGAR
ERLALAI WEST
CHUNNAKAM
LIB...

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ERLALAI WEST
CHUNNAKAM

10 (70) 1981

# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

ERLALAI MUNNETRA MANRAM
ERLALAI WEST
CHUNNAKAM

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
KA/9
LIBRARY

சோவியத்
சித்தாந்த
அரசியல்
பத்திரிகைகளின்
மாதாந்த
மஞ்சரி

நொவஸ்தி
செய்தி
ஸ்தாபனத்
தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் இகோர் வி. ஷுலோவ் அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த றோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| இன்றைய விவகாரங்கள் | சமாதானத்தை பாதுகாப்பிற்காக | 03 |
| | எல்: ஐ. பிரெஷ்னேவ் சோவியத் அரசியல் அமைப்பு மேலும் வளர்ச்சியடைகிறது | 09 |
| மகத்தான பாரம்பர்யம் | வி. ஐ. லெனின் ஜனநாயகமும் அரசும் | 14 |
| மார்க்ஸியம்—லெனினியமும் எமது காலமும் | கலாநிதி யூறி கிராஸின் இன்றைய உலகில் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் | 20 |
| வரலாறும் அனுபவமும் | இகொர் ஷெவ்ட்ஸ் இவான் யுடின் சோவியத்தில் ஒரு கட்சிமுறை இருப்பது ஏன்? | 24 |
| சோவியத் சமுதாயம்: வாழ்வும் பிரச்னைகளும் | அல்பர்ட் ஸிரோட்சின் உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகம் | 27 |
| சோஷலிஸமும் இன்றைய உலகும் | பேராசிரியர் விக்டர் டலிசோவிச் தனிநபர் சுதந்திரம் | 33 |
| வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள் | அர்காடி கௌஃப்மன் தேசிய விமோசப் புரட்சிகள்—இன்று | 37 |
| | வி. இவானோவ் வளமுக நாடுகளில் தேசிய ஜனநாயக முன்னணிகள் | 41 |
| | யூரி ஒஸரோவிற்றியானோவ் ஏகாதிபத்தியமே பின் தங்களுக்கான முழுப் பொறுப்பாளி | 47 |
| | யூரி அலெக்சியெவ் ஆயுதப் பரிகரணத்தின் ஆதாயங்கள் | 50 |
| ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் | சர்வதேச பயங்கரவாதம் | 58 |
| | செர்ஜி அஸ்ரகோவ் முஸ்லீம் மக்களுக்கு எதிராக இஸ்லாமின் ''நண்பர்கள்'' | 62 |



# சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக!

**1981,** ஜுன் 23ந் திகதி சோ. சோ. கு. ஒ. சுப்பிறீம் சோவியத் ''உலகப் பாராளுமன்றங்களுக்கும், மக்களுக்குமான'' வேண்டுகோளொன்றை விடுத்தது.

சுப்பிறீம் சோவியத் கூட்டத் தொடரில் இதனைப் பிரேரித்து உரையாற்றிய சோ. க. க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளரும், சோ. சோ. கு. ஒ. சுப்பிறீம் சோவியத் தலைமைப்பீட அக்கிராசனருமாகிய லியோனிட் பிரெஷ்னேவ் பின்வருமாறு கூறினார்: ''கட்டுப்பாடற்ற ஆயுதத் தயாரிப்பு, இராணுவ வெறியாட்டங்கள் என்பவற்றை நேசிப்பவர்களின் பாதையைத் தடைசெய்வதே இன்று ஒருவரின் மிகப் பிரதான கடமையென்பதை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். வாழ்வதற்கான மக்களின் உரிமையினைப் பாதுகாப்பதற்காகத் தன்னாலியன்ற அத்தனையையும் ஒருவர் செய்தல் வேண்டும். இது சகலரையும் பாதிக்கக்கூடியதாகையால் இவ் விஷயத்தை எவரும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இது அரசியற் கட்சிகளையும், பொது நிறுவனங்களையும், மக்களாற் தெரிவுசெய்யப்பட்டு மக்களுக்காகவே செயலாற்றிவரும் பாராளுமன்றங்களையும் பாதிக்கிறது.

மிகச் சிக்கலான ஒரு சூழ்நிலையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் தலைமையின் கீழுள்ள இராணுவ வட்டாரங்கள் இணக்கவமைதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முனைகின்றன. அவை ஸால்ட் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டு கட்டுப்பாடற்ற ஆயுதக் குவிப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. உலகளாவிய முறையில் பாரிய அழிவு ஆயுதங்களைப் பரப்பிவைத்தலை அதிகரித்து வருவதற்கான பழி ஏகாதிபத்தியத்தையே சாரும். மிகப்பயங்கரமான ஆயுதப்போட்டியொன்று மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது, மிக நவீனமான அழிவு ஆயுதங்கள் வடிவமைக்கப்பட்டுவருகின்றன. ஐக்கிய அமெரிக்க

மத்திம வீச்சு ஏவுகணைகளுக்கான ஏவுதளங்கள் மேற்கு ஐரோப்பாவில் தயார் செய்யப்பட்டுள்ளன.

சமாதானத்திற்கான ஆபத்து மிகப் பயங்கரமானது, ஆனால் அது தவிர்க்கப்படக்கூடியது. சக்திமிக்க ஆக்கிரமிப்பாளரை எதிர்க்கும் சக்திகளுக்கு சாதகமான வாய்ப்புக்கள் பல உள்ளன. அவற்றை முழு வேகத்தில் இயங்கச் செய்தல் வேண்டும், அதனை இப்பொழுதே, இக்கணமே இயங்கச் செய்தல் வேண்டும்.

வரலாறு மனிதகுலத்திற்கு கடினமான பாடமொன்றை ஏற்கனவே போதித்துள்ளது. இரண்டாவது உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்குத் தவறியமைக்கான தண்டத்தை உலக நாடுகள் செலுத்தித்தீர்த்துவிட்டன. இவ்வாறான இன்னொரு துயர் இனிமேல் இடம்பெறவே கூடாது. கடந்தகால நிகழ்வுகளிலிருந்து மனிதகுலம் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

யுத்தப் பயமுறுத்தலுக்கு எதிரான, சமாதானத்தை நேசிக்கும் நாடுகளும், மக்கள் சக்திகளும், இயக்கங்களும் செயலூக்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய மிக முக்கியமான காலகட்டம் இதுவேயாகும். ஏனெனில் புவியிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் அழிக்கவல்ல ஆயுதங்கள் செய்துகுவிக்கப்படுவது இப்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் சமாதானத்தைப் பாதுகாப்பதும், அணு ஆயுத யுத்தமொன்றைத் தவிர்ப்பதும், யுத்த ஆபத்திற்கெதிராக உறுதியாகப் போராடுவதும் உலக நாகரீகத்தில் அக்கறை கொண்டுள்ள சக்திகளின் அவசிய செயற்பாடுகளாகின்றன. குறிப்பாக சோவியத் மக்கள் இதனை நன்குணர்ந்துள்ளார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஹிட்லருடைய பாஸிஸம் வரலாறு முன்னொருபோதும் கண்டறியாத கொடிய போரொன்றைக் கட்டவிழ்த்துவிட்டது. சோவியத் மக்கள் இந்த யுத்தத்தில் வெற்றியீட்டினார்கள். ஆனால் இந்த வெற்றிக்கு அவர்கள் கொடுத்த விலையை அவர்களே நன்கறிவார்கள்.

இந்தக் கொடுமைகள் மீண்டும் நிகழாது தவிர்ப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசாங்கமும் தம்மாலான அனைத்தையும் செய்துவருகின்றன.

சோ. க. க. வின் 26வது காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட 1980 களுக்கான சமாதான வேலைத்திட்டம் நியூக்கிலியர், பாரம்பரிய ஆயுதங்கள், தரைப்படை, கடற்படை, ஆகாயப்படைத் துருப்புக்கள் என்பவற்றைக் குறைப்பதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைத்துள்ளது. முரண்பாடுகளுக்கான சூழல்களை இல்லாதொழித்தல், முக்கிய சர்வதேசப் பிரச்னைகளுக்கு சமாதானபூர்வமான தீர்வுகளைக் காணுதல் என்பவற்றை இலக்காகக் கொண்ட பிரேரணைகளை காங்கிரஸ் முன்வைத்தது.



எமது அணுயுகத்தில் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு நிபந்தனைகள் எதுவுமற்ற நேர்மையான, சமத்துவமான பேச்சுவார்த்தைகளைத் தவிர நியாயமான மாற்றுவழிகள் எதுவுமே இல்லை. சோ. க. க. வும், சோவியத் அரசும் இவ்வாறான பேச்சுவார்த்தைகளையே பெரிதும்விரும்புகின்றன. ''உலகப்பாராளுமன்றங்களுக்கும், மக்களுக்கும்'' சோ. சோ. கு. ஒ. சுப்பிறீம் சோவியத் விடுத்துள்ள வேண்டுகோள் இதற்கு உறுதியானதோர் சான்றாக உள்ளது.

சோவியத் அரசு ''சமாதானம்'' என்ற வார்த்தையை உச்சரித்துக்கொண்டே உதயமாகியது. அன்றிருந்து சமாதானத்தின் புனித பதாகையை அது சுமந்து செல்கிறது. இன்னொரு உலகயுத்த அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு சாத்தியமான ஒவ்வொன்றையும் சோவியத் அரசும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் செய்துவருகின்றன.

சமாதானத்தை நேசிக்கும் சக்திகள் யாவற்றினதும் கூட்டு முயற்சிகள் மூலம் உலக சமாதானம் உறுதியாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

பிராவ்தா.

ERLALAI MUNNETRA MANRAM
ERLALAI WEST
CHUNNAKAM

# எமது காலத்தின் தலையாய பிரச்சினை

சோ.க.க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளரும், சோ. சோ.கு.ஒ. சுப்றீம் சோவியத் தலைமைப்பீட அக்கிராசனருமாகிய லியோனிட் பிரெஷ்னேவ் சுப்பிறீம் சோவியத்கூட்டத் தொடரின்போது உலகப் பாராளுமன்றங்களுக்கும் மக்களுக்குமான வேண்டுகோள் குறித்து நிகழ்த்திய உரை இன்றும் உலகமக்களினதும், பத்திரிகைகளினதும் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து வருகின்றது. சமாதானம், இணக்கவமைதி என்பவற்றில் சோ.சோ.கு.ஒ. மீண்டும் முன்னணிவகிப்பதாக பல்வேறு நாடுகளின் புகழ்பெற்ற ராஜ்யவாதிகளும், பிரமுகர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். இது பற்றி வெளியிடப்பட்ட கருத்துக்களில் சிலவற்றை இங்கு காணலாம்.

சமாதானத்தைப் பாதுகாப்பதே சோவியத் ராஜ்ய வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான இலக்சாகுமென செக்கோஸ்லாவாக்கியப் பத்திரிகையாகிய 'றூடி பிருவோ' எழுதியுள்ளது. ''சோ.சோ.கு.ஒ சுப்பிறீம் சோவியத்தின் முன்னெடுப்பிற்கு முழு ஆதரவு'' என்ற தலைப்பின் கீழ் ஐரோப்பிய பந்தோபஸ்த்து ஒத்துழைப்பிற்கான செக்கோஸ்லாவாக்கியக் கமிட்டியின் தலைமைப்பீடத்தினது அறிக்கையை இப்பத்திரிகை பிரசுரித்துள்ளது. முரண்பாடான பிரச்சினைகள், அவை எவ்வளவு சிக்கலானவையாக இருந்தபோதிலும்கூட அவற்றிற்குத் தீர்வுகாண்பதற்கான நியாயமானமார்க்கம் பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறெதுவுமே இருக்கமுடியாதென்பதை இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

எதிர்கால மனிதகுலத்தில் அக்கறை கொண்ட, மனித குலத்திற்கான வேண்டுகோளொன்று மீண்டும் மாஸ்கோவிலிருந்து ஒலிக்கிறது என்று பல்கேரியப் பத்திரிகை ''ஸெமெடெல்ஸ்கோ ஸேம்'' எழுதியுள்ளது. சோ. க. க. வினதும், சோவியத் அரசினதும் உண்மையான லெனினிஸ வெளிநாட்டுக் கொள்கையினதும், புதியதொரு உலகப்



பேரழிவு நிகழாது தடுப்பதற்கும், இராணுவச் சக்திகளைக் குறைப்பதற்குமான அதனுடைய முழுமனதான விருப்பினதும் சாராம்சமே இந்த வேண்டுகோளாகும்.

சோ.சோ.கு.ஒ. வின் மீது பாஸிஸ ஜேர்மனி தாக்குதல் தொடுத்த 40வது ஆண்டு தினத்தில் சோ.சோ.கு.ஒ. சுப்பிறீம் சோவியத் உலகிலுள்ள சகல நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளமை ஓர் ஆழமான மனப்பதிவை ஏற்படுத்த வல்லதாக உள்ளதென போலிஷ் பத்திரிகையான ''ரிபியூனு லூடா'' வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவுடனும் அதனுடைய நேட்டோ நட்பு நாடுகளுடனும் ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கான அழைப்பை லியோனிட் பிரெஷ்னேவ் மீண்டும் விடுத்துள்ளமையை 'த நியூயோர்க் ரைம்ஸ்'' சுட்டிக்காட்டியுள்ளது. தமது செயற்பாடுகள் மூலம் ஆயுதப்போட்டியைத் தூண்டிவிடும் அனைவரும் உண்மையிலேயே மனிதகுலத்தை பரிநாசத்தை நோக்கித் தள்ளிச் செல்கிறார்களென மாஸ்கோ எச்சரிக்கை விடுத்துள்ளது.

சோவியத் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரில் சோவியத் தலைவர் சோ.சோ.கு.ஒ வின் உறுதியான வெளிநாட்டுக் கொள்கைப் போக்கினைத் தெளிவாக நடைமுறைப்படுத்திக் காட்டுகிறார் என்று மேற்கு ஜேர்மனியப் பத்திரிகை ''கொல்னர் ஸ்ராட்—அன்ஸெய்கர்'' எழுதியுள்ளது. சோ.க.க.வின் 26வது காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் சமாதான வேலைத்திட்டத்தின்பால் உலக மக்களின் கவனத்தை அவர் மீண்டுமொருமுறை ஈர்த்துள்ளார். இந்த அணுயுகத்தில் எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்வதற்கு அனைவராலும் வேண்டப்படுவது பேச்சுவார்த்தைகளே என்பதனை மேற்கு ஜேர்மன் பத்திரிகைகள் பல விசேஷமாக வலியுறுத்துகின்றன.

சோ.சோ.கு.ஒ. சுப்பிறீம் சோவியத்தின் வேண்டுகோள் பற்றிக் கருத்துத் தெரிவித்த நிக்காராகுவே பத்திரிகையான ''பரிக்காடா,'' ''பதிலளிக்காதிருக்கமுடியாத ஒரு வேண்டுகோள்'' என்று எழுதியது.

ஹிட்லரின் ஆக்கிரமிப்பின் விளைவாக 20 மில்லியன் உயிர்களைப் பலிகொடுத்த சோவியத் மக்கள் மற்றெல்லோரையும்விடச் சிறப்பாக சமாதானத்தின் விலையை அறிந்துள்ளார்கள் என்று ஸான்டினிஸ்டுக்களின் தேசிய விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வமான பத்திரிகை எழுதியுள்ளது.

குயாறுவின் தலைநகரில் நடைபெற்ற மகாநாட்டில் பங்குகொண்டவர்கள் சோ.சோ.கு.ஒ. சுப்பிறிம் சோவியத்தின் உலகப் பாராளுமன்றக்களுக்கும், மக்களுக்குமான வேண்டுகோளுக்கு தமது ஆதரவினைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

சோவியத் ஒன்றியம் தனது ஆரம்பகால முதலே சமாதானத்திற்காகச் செயல்முனைப்பாகப் பணியாற்றி வந்துள்ளதுடன், ஆயுதப்போட்டிக்கெதிராகவும் போராடி வந்துள்ளதாக ஒருமைப்பாட்டிற்கும், சமாதானத்திற்குமான கயானா கமிட்டியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று கூறுகிறது.

சோவியத் ராஜ்யத்தின் புதிய சமாதானபூர்வமான முன்னெடுப்புக்கள் யுத்தப்பயமுறுத்தலை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளனவென்றும் அது கூறுகிறது.

எல். ஐ. பிரெஷ்னேவ்

# சோவியத் அரசியல் அமைப்பு மேலும் வளர்ச்சியடைகிறது

சோவியத் சமுதாயத்தின் பொருளாதார, பொது. அறிவுத்துறை வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களும், அனைத்து மக்கள் அரசின் ஆழமான ஜனநாயகத் தன்மையும் சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. நகல் அடிப்படைச் சட்டத்தின் விவாதத்தின்போது தோற்றுவிக்கப்பட்ட மக்களின் படைப்பாற்றல் முயற்சியையும், பொது நடவடிக்கைகளில் ஏற்பட்ட பிரம்மாண்டமான எழுச்சியையும் நாம் அனைவரும் நினைவில் வைத்துள்ளோம்.

சோவியத் யூனியனின் அரசியல் சட்டமும், அதற்குப் பிறகு யூனியன் குடியரசுகள் மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் அரசுகளின் அரசியல் சட்டங்களும் ஏற்கப்பட்ட பின்னர் மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் பணியில் ஒரு புதிய கட்டம் துவங்கியுள்ளது.

அரசு அதிகாரத்தின் ஆக உயர்ந்த அமைப்புகளின் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத், குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளின்—பணியில் ஒரு குறிப்பிடத்தக்க உத்வேகம் ஏற்பட்டுள்ளது. சட்டமியற்றுதல், நிர்வாகம், மேற்பார்வை ஆகியவற்றை இணைப்பதன் மூலம் அமைச்சரவைகளுக்கும், அமைச்சகங்களுக்கும், துறைகளுக்கும் சுப்ரீம் சோவியத்துகள் செயலூக்கமுடன் வழிகாட்டுகின்றன. இது, சரியான தருணத்தில் குறைபாடுகளை இனம் கண்டு போக்குவதற்கு உதவிபுரிந்து, அரசு வாழ்க்கையின் ஒட்டுமொத்த ஜீவசக்தியை மேம்படுத்துகிறது.

அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சோவியத் சட்டங்களைத் தற்போது புதுப்பிப்பது அளப்பரிய பயனுள்ள விளைவை ஏற்படுத்தியுள்ளது. புதிய சட்டங்கள் சமூக உறவுகளின் பல்வேறு அம்சங்களைக் கூடுதல் நயமுடனும். துல்லியத்துடனும் முறைப்படுத்துவதைச் சாத்தியப்படுத்தி வருகின்றன. சட்டங்களைச் செம்மைப் படுத்தும் பணி தொடரும். இங்கு மூன்று முன்னுரிமைப் பகுதிகள் உள்ளன: தேசியப் பொருளாதாரத்தை நிர்வகித்தல், பிரஜைகளும் பொது அமைப்புகளும் தமது அரசியல்சட்ட உரிமைகளைப் பயன்படுத்துதல், சோவியத் யூனியனின் சட்டத் தொகுப்பை வெளியிடுவதை நிறைவேற்றுவது ஆகியவை இவை.

நாம் பல நல்ல சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். இப்போது அவற்றைத் துல்லியமாகவும், உறுதியாகவும் செயல்படுத்துவதுதான் பிரதான விஷயம், எல்லோரும் எல்லா இடங்களிலும் சட்டங்களைக் கடைப்பிடிக்கும் போதுதான், அவை, சட்டங்களாக நிலைத்து நீடிக்கின்றன.

ஸ்தல சோவியத்துகளின் பணியில் எவ்வளவோ சுவையான விஷயங்களும் புதியவையும் உள்ளன. ஸ்தல பொருளாதாரத்தையும் மக்களுக்கான சேவைகளையும் கவனிப்பதைக் குறைக்காமல், அவை, விரிவான பொருளாதார, சமூக வளர்ச்சியை உத்தரவாதம் செய்வதற்கு அதிகமான பணி ஆற்றுகின்றன. அவை, தமது பிரதேசத்திலுள்ள நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் பணியை ஒருங்கிணைப்பதையும் கட்டுப்பாடு செய்வதையும் அதிகரித்து வருகின்றன. இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியானது ஸ்தல சோவியத்துகளின் பணியில் இத்திசைவழியைத்தான் ஆதரிக்கிறது.

நமது நாட்டில் கிட்டத்தட்ட பத்து லட்சம் கம்யூனிஸ்டு பிரதிநிதிகள் உள்ளனர், சோவியத்தின் ஒவ்வொரு கூட்டத்தையும், அதன் நிரந்தரக் கமிஷனின் ஒவ்வொரு கூட்டத்தையும் மக்களின் கவுன்சில் எனும் சொல்லின் பொருளை மெய்ப்பிக்கும் வகையில் அதை மாற்றுவதற்கும், மிகச் சரியான தீர்வுகளுக்கும் கூட்டு முறையில் அமைந்த தேட்டமாக அதை மாற்றுவதற்கும் அவர்கள் தமது செல்வாக்கையும் அனுபவத்தையும் பயன்படுத்த வேண்டும்.

சோவியத் ஜனநாயகத்தின், செயல் முறையிலான ஜனநாயகத்தின் சாரம், பொதுப்பணியின் பாலான, உற்பத்தியின் வளர்ச்சியின் பாலான அக்கறையிலும், அனுபவத்தைப் பரிமாறிக் கொள்வதிலும், மனந்திறந்த கோட்பாடு ரீதியான விமர்சனம், சுய விமர்சனத்திலும், ஒவ்வொரு பிரஜையின் சமூக-அரசியல் நடவடிக்கையை ஊக்குவிப்பதிலும் அடங்கியிருக்கின்றது.

நிர்வாக அமைப்புகள் மற்றும் அதிகாரிகளின் பணியின் மீது சர்வாம்ச மக்கள் கட்டுபாட்டைக் கொண்டு வருவது சோவியத் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். தனியொரு மீறலைக் கூட, தனியொரு தவறு, விரையம், அல்லது கட்டுப்பாடின்மையைக் கூட மக்கள் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் கவனியாதிருக்கக் கூடாது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியானது கூடுதல் உத்வேகமான, உறுதியான நடவடிக்கை எடுக்கும்படி அவர்களைப் பணிக்கின்றது.

சோஷலிச சட்டவியலையும், சட்டம் ஒழுங்கையும் வலுப்படுத்துவது சம்பந்தமாக நீதித்துறை அமைச்சகம்,



அதன் இலாக்காக்கள், நீதிமன்றங்கள், புரோகுரேட்டரின் அலுவலகம், சோவியத் காவல்துறை ஆகியவற்றுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. இந்த அமைப்புகளது அதிகாரிகளின் தனித் தொழில் அறிவுடன் பொதுநலத் துணிவும் லஞ்சஊழலற்ற தன்மையும் நியாய உணர்வும் இணைய வேண்டும். இத்தகைய உயர்ந்த பண்பாளர்கள்தான் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கிய கடமைகளைத் தகுதியான முறையில் நிறைவேற்ற முடியும். அவர்கள் அதிகபட்சத் திறமையுடன் பாடுபடவேண்டும் என்றும், ஒவ்வொரு குற்றமும் சரியான முறையில் விசாரிக்கப்படவேண்டும் என்றும், குற்றவாளிகள் அவர்கள் செய்த குற்றத்திற்கு ஏற்ப தண்டிக்கப்படவேண்டும் என்றும் சோவியத் மக்கள் வெகு நியாயமாகவே எதிர்பார்க்கின்றனர். இவ்விஷயத்தில், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் அமைப்புகளுக்கு கட்சியின் முழு ஆதரவும் கிடைக்கும்; நமது மக்கள் அனைவரின் முழு ஆதரவும் கிடைக்கும் என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

சோவியத் யூனியனின் அரசியல் சட்டம் நமது ஜனநாயகத்தின் வளர்ச்சியில் பொதுஜன அமைப்புகளின் பாத்திரத்தை வெகுவாக மேம்படுத்தியுள்ளது. இவற்றில் மிகப் பெரியவை தொழிற்சங்கங்கள். இப்போது இவை கோடிக் கணக்கான கூட்டுப்பண்ணை விவசாயிகளையும் தன்னகத்தே சேர்த்துக் கொண்டுள்ளதால், தொழிற்சங்கங்கள் இப்போது அநேகமாகச் சகல உழைக்கும் மக்களையும் தழுவியதாக உள்ளன. அவற்றுக்கு மிக விரிவான கடமைகளும் உரிமைகளும் உள்ளன. அவை உழைக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாக்கின்றன: பொருளாதார, சமூக, கலாசாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பங்கு கொள்கின்றன; சோஷலிச ஆதர்சப் போட்டியையும் கண்டுபிடிப்புகளையும் புதுமைப் புனைவுகளையும் ஊக்குவிப்பதற்குப் பெரும் பணிபுரிகின்றன.

இருந்தாலும், தமது விரிவான உரிமைகளைப் பயன்படுத்துவதில் நமது தொழிற்சங்கங்கள் சில வேளைகளில் முன்முயற்சியை வெளிப்படுத்தவில்லை என்று கூறும்போது நான் தவறு செய்யவில்லை என்று நினைக்கிறேன். கூட்டு உடன்பாடுகளையும் தொழிலாளர் பாதுகாப்பு சம்பந்தமான விதிகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமாக அவை சகல சந்தர்ப்பங்களிலும் விடாமுயற்சியைக் காண்பிப்பதில்லை; தொழிலாளர் சட்டங்கள் மீறப்படுதல், எதேச்சாதிகார நடைமுறைகள், சிவப்புநாடா போன்ற சந்தர்ப்பங்களில் அவை போதுமான பிரதிபலிப்புக் காட்டுவதில்லை.

இதன் பொருள் என்னவென்றால் தொழிற்சங்கங்களும், உழைப்புக் கூட்டமைப்புகளும் மக்களின் வேலை மற்றும் வாழ்க்கையின் சகல பிரச்சினைகள் சம்பந்தமான முடிவெடுப்பதில் தமது கட்டுப்பாட்டை இறுக்கவேண்டும்;

உற்பத்திக்குத் திட்டமிடுவதிலும், அவர்களை உரிய இடத்தில் அமர்த்துவதிலும், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் வசத்தில் உள்ள நிதிகளைப் பயனுறுதியுடன் உபயோகப் படுத்துவதிலும் கூடுதல் பங்கு பற்ற வேண்டும் என்பதாகும்.

வெகுஜனங்கள் மத்தியில் தன்னை ஆதரிக்கும் தூணாகவும், ஜனநாயகத்தை ஊக்குவிப்பதிலும் கம்யூனிச நிர்மாணத்தில் மக்களை ஆகர்ஷிப்பதிலும் ஒரு சக்திவாய்ந்த சாதனமாகவும் கட்சி தொழிற்சங்கங்களைக் கருதுகிறது. லெனினுடைய தீர்க்கதரிசனங்களில் ஒன்றுவது: ''வெகு ஜனங்களுடன் தொடர்பு கொள்வது, அதாவது மிகப் பெரும்பாலான தொழிலாளர்களுடன் (இறுதியில் சகல உழைக்கும் மக்களுடன்,, தொடர்பு கொள்வது சகல தொழிற்சங்க நடவடிக்கைகளின் வெற்றிக்கு மிக முக்கியமான, மிக அடிப்படையான நிபந்தனையாகும்.'' தொழிற்சங்கவாதிகள் தொழிலாளரின் வாழ்க்கையில் பங்கு கொள்ள வேண்டும்; அதை முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். எத்தகைய போலி கற்பனை வாதத்தன்மையுமின்றி வெகு ஜனங்களின் மனோபாவத்தையும், அரசியல் உணர்வு மட்டத்தையும், வெகு ஜனங்களின் மெய்யான தேவைகளையும் தவறின்றி மதிப்பிடவேண்டும்; வெகு ஜனங்கள்பால் தோழமை பூர்வமான கண்ணோட்டம் கொள்வது மூலமும், அவர்களது தேவைகளை அன்புடன் பூர்த்தி செய்வது மூலமும், அவர்களது தயக்கமற்ற ஆதரவைப் பெற வல்லவர்களாயிருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ஒவ்வொரு தொழிற்சங்கவாதியும், எப்போதும் எல்லா விஷயங்களிலும் தனது நடவடிக்கைகளை லெனினுடைய இந்தக் கட்டளைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார் என்று நான் நம்புகிறேன்.

லெனினிய இளங் கம்யூனிஸ்டுக்கழகத்தில் 4 கோடிக்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் உள்ளனர். இளம் கம்யூனிஸ்டுக் கழகம் நமது வாரிசு என்றும், கட்சியின் உதவியாளன் எனறும் பல சந்தர்ப்பங்களில் கூறுகிறோம். இது சரியானது, முற்றிலும் சரியானதாகும். இன்று 18 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்டவர்களான இளம் வயதினர் நாளை நமது சமுதாயத்தின் முதுகெலும்பாக மாறுவர். இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தின் மிக முக்கியமான கடமைகளானவை, மையமான கடமைகளானவை, வளர்ந்து வரும் தலைமுறையினர் எவ்வாறு வேலை செய்வது என்பது பற்றி விருப்பமும், ஞானமும் கொண்டு, எப்போதும் தமது நாட்டைப் பாதுகாப்பதற்குத் தயாராயுள்ள அரசியல் ரீதியில் செயலூக்கமான நல்லறிவு படைத்தவர்களாக உருவாவதற்கு உதவுவதாகும்.

மொத்தத்தில், இளம் கம்யூனிஸ்டுக் கழகம் இக்கடமையைப் பூர்த்தி செய்து வருகிறது. நாட்டின் மிகப் பல்வே



று பகுதிகளில் நூற்றுக்கணக்கான திட்ட நிலையங்களை அது பூர்த்தி செய்துள்ளது. அரசாங்கத்தையும் சகல பொது வாழ்க்கையையும் நிர்வகிப்பதில் அது பெரும் பங்கு வகித்து வருகிறது. இப்பாதையைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

ஆனால், நம்மை நாமே பாராட்டிக் கொள்வது நமது மரபல்ல. கல்வி கற்ற, விஷயஞானமுடைய சில இளவயதினர் அதே சமயத்தில் அரசியல் ரீதியில் அப்பாவிகளாக இருப்பதும், தொழில் பயிற்சிக்கேற்ப அவர்கள் உழைப்பின்பால் போதுமான பொறுப்புள்ள கண்ணோட்டம் இல்லாதிருப்பதும் இரகசியமான விஷயமல்ல. இளம் கம்யூனிஸ்டுக் கழகம் செய்யாது விட்டுப் போன செயல்களின் விளைவு இது.

எனவே, கல்விப் பணிக்குக் கூடுதல் அழுத்தம் கொடுக்க வேண்டும். நான் இங்கு உழைப்புப் பயிற்சி தார்மீக வளர்ப்பு, சித்தாந்த, அரசியல் கல்வியைக் குறிப்பிடுகிறேன். சகல வகைப்பட்ட ''நடவடிக்கைகள்,' கூடுதலாக இருக்கவேண்டும் என்பதல்ல இதன் பொருள். ஒவ்வோர் இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தினுள்ளும், உயிரோட்டமுள்ள, படைப்பாற்றல் சூழ்நிலை அமையவேண்டும். வெறுமனே சொல்லிக் கொடுக்கும்போது அல்லாது அனுபவிக்கப் படும்போதுதான் உண்மையானது சரியான முறையில் கிரகிக்கப் படுகிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். நடைமுறை விவகாரங்களுடனும், தனது உறுப்பினர்களின் வாழ்க்கையுடனும் இணையும் வகையில் இளம் கம்யூனிஸ்டுக் கழகம் மார்க்சிய-லெனினிய சித்தாந்தக் கல்வியை ஒழுங்கமைக்க வேண்டும்.

இங்கே பல விஷயங்கள் கம்யூனிஸ்டுகள் மீது, நம் மீது சார்ந்து இருக்கின்றன. நமது அனுபவம், மார்க்சியம்-லெனினியம் தான் சரியானது என்னும் நமது நம்பிக்கை பல பத்தாண்டுகளின் சோதனையில் வென்று தேர்ந்துள்ளது. இச் செல்வத்தை இளம் மக்களும் மாற்றிக் கொடுக்கவேண்டும். சோவியத் இளைய தலைமுறையினர் கம்யூனிசப் பதாகையை எப்போதுமே உயர்த்திப் பிடிப்பர் என்பதற்கு உறுதியான உத்தரவாதம் இதில்தான் அடங்கியுள்ளது.

சோ. க. க. வின் 26வது காங்கிரசிற்கு
சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து

மகத்தான
பாரம்பர்யம்

வி. இ. லெனின்

# ஜனநாயகமும் அரசும்

முதலாளித்துவ சமுதாயத்தில் மிகவும் சாதகமான நிலைமைகளில் அது வளர்வதாய்க் கொள்வோமாயின் ஜனநாயகக் குடியரசில் ஓரளவு முழுமையான ஜனநாயகம் இருக்கக் காண்கிறோம். ஆனால் இந்த ஜனநாயகம் எப்பொழுதும் முதலாளித்துவச் சுரண்டலால் எழுப்பப்படும் குறுகலான வரம்புகளால் இறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நடைமுறையில் எப்பொழுதும் சிறுபான்மையோருக்கான ஜனநாயகமாகத்தான் இருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரமானது, பண்டைக் கிரேக்கக் குடியரசுகளில் இருந்ததே, ஏறத்தாழ அதேபோல அடிமையுடைமையாளர்களுக்கான சுதந்திரமாகத்தான் எப்பொழுதுமே இருந்து வருகிறது. முதலாளித்துவச் சுரண்டலின் நிலைமைகள் காரணமாய் தற்காலக் கூலி அடிமைகள் பட்டினியாலும் வறுமையாலும் நசுக்கப்பட்டு "ஜனநாயகம் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி". "அரசியல் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி" அவலநிலையில் இருத்தப்பட்டிருக்கிறார்கள். நிகழ்ச்சிகள் சாதாரணமாய் சமாதான வழியில் ஓடிக்கொண்டிருக்கையில் பெரும்பான்மையான மக்கள் பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டுவிடுகிறார்கள்.

மிகச் சொற்பமான சிறுபான்மையோருக்கு ஜனநாயகம், செல்வந்தர்களுக்கு ஜனநாயகம் இதுதான் முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் ஜனநாயகம். முதலாளித்துவ ஜனநாயகத்தின் கட்டமைவை மேலும் நெருங்கிச் சென்று பார்த்தோமாயின், வாக்குரிமையின் "அற்ப" அற்பனமானவை என்று சொல்லப்படுபவை-விவரங்களிலும், (குடியிருப்புத் தகுதி, பெண்களின் விலக்கம் முதலானவை), பிரதிநிதித்துவ உறுப்புக்களின் செயல்முறையிலும், கூட்ட உரிமைக்கு நடைமுறையில் இருந்துவரும் தடங்கல்களிலும் (பொதுக் கட்டிடங்கள் "ஓட்டாண்டிகளுக்கு" உதவாதவை) நாளேடுகளின் முற்றிலும் முத



லாளித்துவ முறையிலான ஏற்பாட்டிலும், இன்ன பிறவற்றிலும் எங்கும் ஜனநாயகத்துக்கு கட்டுக்கு மேல்கட்டு போடப்பட்டிருப்பதைத்தான் காண்கிறோம். ஏழைகளுக்கு இடப்பட்டுள்ள இந்தக் கட்டுகளும் விலக்குகளும் ஒதுக்கல்களும் தடங்கல்களும் அற்பசொற்பமாகவே தோன்றும்; முக்கியமாய் இல்லாமையை நேரில் அறிந்திராதோருக்கும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் அவற்றின் வெகுஜன வாழ்வில் என்றுமே நெருங்கிய தொடர்பு கொண்டிராதோருக்கும் (முதலாளித்துவ நூலாசிரியர்களிலும் அரசியல்வாதிகளிலும் பத்தில் ஒன்பது பேர், ஏன் நூற்றில்தொண்ணூற்று ஒன்பதுபேர் என்று கூடச் சொல்லலாம்.) இந்த ரகத்தவரே இப்படித்தான் அற்பசொற்பமாகவே தோன்றும். ஆனால் ஒட்டுமொத்தத்தில் இந்தக் கட்டுகள் ஏழைகளை அரசியலிலிருந்து—ஜனநாயகத்தில் நேரடியாய் பங்கு கொள்வதிலிருந்து ஒதுக்கி வெளியே தள்ளிவிடுகின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் இந்த சாராம்சத்தை மார்க்ஸ் மிக நன்றாய் உணர்ந்திருந்தார். கம்யூனுடைய அனுபவத்தை ஆராய்கையில், ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் வர்க்கத்தின் எந்தப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளாய் அமர்ந்து தம்மை அடக்கியொடுக்கவேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு ஒருமுறை தீர்மானிக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்!

தவிர்க்க முடியாதவாறு குறுகலாகவும், ஏழைகளைத் திருட்டுத்தனமாய் ஒதுக்கித் தள்ளிவிடுவதாகவும், ஆகவே கபடமாவும் முழுக்க முழுக்க பொய்க் கூற்றாகவும் இருக்கும் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து முன்னேக்கிச் செல்வதற்குரிய வளர்ச்சி, மிதவாதப் பேராசிரியர்களும் குட்டி முதலாளித்துவச் சந்தர்ப்பவாதிகளும் நம்மை நம்பவைக்க விரும்புவதுபோல, எளிய முறையிலும் நேரடியாகவும், ஒழுங்காகவும் "மேலும் மேலும் கூடுதலான ஜனநாயகத்தை" நோக்கி நடைபெறுவதில்லை. இல்லை, முன்னேக்கிச் செல்கிற வளர்ச்சியானது, அதாவது கம்யூனிசத்துக்கான வளர்ச்சியானது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது, வேறு எவ்வழியிலும் அல்ல. ஏனெனில் முதலாளித்துவச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பை வேறுயாராலும் அல்லது வேறு எந்த வழியிலும் தகர்த்திட முடியாது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது, அதாவது ஒடுக்குமுறையாளர்களை அடக்குவதற்காக ஒடுக்கப்பட்டவர்களுடைய முன்னணிப் படை ஆளும் வர்க்கமாய் அமையும் ஒழுங்கமைப்பானது ஜனநாயகத்தை விரிவாக்குவதோடு மட்டும் நின்றுவிடக் கூடியதல்ல. ஜனநாயகத்தை பிரம்மாண்டமான அளவில் விரிவாக்குவதுடன், பணமூட்டைகளுக்கான ஜனநாயகமாய் இராது முதன்முதலாய் ஏழைகளுக்கான ஜனநாயகமாய், ஆக்குவதுடன் கூடவே ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டலாளர்களும் முதலாளிமாரே

ரின் சுதந்திரத்துக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வரிசையாகப் பல சட்டுக்களை விதித்திருக்கிறது. மனித குலத்தை கூலி அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இவர்களை நாம் அடக்கியாக வேண்டும். இவர்களுடைய எதிர்ப்பை வன்முறைகொண்டு நசுக்கியாக வேண்டும். அடக்கியாளுதல் இருக்கும்வரை, பலாத்காரம் இருக்கும் வரை சுதந்திரத்துக்கோ ஜனநாயகத்துக்கோ இடமில்லை என்பது தெளிவு.

பெபெலுக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் இதனை மிகச் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார். ''பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவைப்படுவது தனது எதிராளிகளை அடக்கி இருத்துவதற்காகவே அன்றி சுதந்திரத்தின் நலன்களுக்காக அல்ல; சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகியதும் அரசு அரசாய் இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது'' என்று இக் கடிதத்தில் எங்கெல்ஸ் கூறியது வாசகர்களுக்கு நினைவிலிருக்கும்.

மிகப் பெருவாரியான மக்களுக்கு ஜனநாயகம், சுரண்டலாளர்களையும் மக்களின் ஒடுக்கு முறையாளர்களையும் வன்முறை கொண்டு அடக்குதல், அதாவது ஜனநாயகத்திலிருந்து விலக்கி ஒதுக்குதல்—முதலாளித்வத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லுகையில் இதுவே ஜனநாயகத்தின் ஏற்படும் மாறுதல்.

கம்யூனிச சமுதாயத்தில்தான்— முதலாளிகளுடைய எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு முதலாளிகள் மறைந்து போய், வர்க்கங்கள் இல்லாமற் போய்விடும் (அதாவது சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்திச் சாதனங்களிடன் அவர்களுக்குள்ள உறவு சம்பந்தமாய் எந்தப் பாகுபாடும் இல்லாமற் போய்விடும்) அப்போழுது மட்டும்தான் ''அரசு இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது'', சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகிறது''. அப்பொழுதுதான் மெய்யாகவே முழு நிறைவான ஜனநாயகம். விதிவிலக்கு எதுவுமில்லாத ஜனநாயகம் சாத்தியமாகிக் கைவரப் பெறுகிறது. அப்பொழுதான்அரசு உலர்ந்து உதிரத் தொடங்கும், முதலாளித்துவஅன்மை வாழ்விலிருந்தும் முதலாளித்துவச் சுரண்டலின் சகிக்கவொண்ணாத கொடுமைகளிலிருந்தும் அபத்தங்களிலிருந்தும் இடுக்குகளிலிருந்தும் மக்கள் விடுபட்டு, பல நூறு ஆண்டுகளாய் அறிந்துள்ள ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் அரிச் சுவடி நீதிவிளக்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்துள்ள சமுதாய ஒட்டுறவின் சர்வசாதாரண விதிகளைப் பற்றியொழுகச் சிறிது சிறியாய்ப் பழகிக் கொள்வார்கள். பலாத்காரம் இல்லாயலே, பலவந்தம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே, பலவந்தத்துக்கான அரசு எனப்படும் தனி வகை இயந்திரம் இல்லாமலே அவர்கள் இவ்விதிகளைப் பற்றியொழுகப் பழகிக் கொள்வார்கள்.



''அரசு உலர்ந்து உதிர்கிறது'' என்னும் தொடர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தொடர் இந்நிகழ்ச்சிப் போக்கின் படிப்படியாய் நடந்தேறும் தன்மை, தன் இயல்பாய்த் தானே நடந்தேறும் தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாய் உள்ளது. பழக்கத்தால் மட்டுமே இது போன்ற விளைவு ஏற்பட முடியும். ஐயப்பாட்டுக்கு இடமின்றி நிச்சயம் ஏற்படவும் செய்யும், ஏனெனில் சுரண்டல் இல்லாதபோது, ஆத்திரம் உண்டாக்கக் கூடியதும், கண்டனத்தையும் கலகத்தையும் எழச் செய்து அடக்க வேண்டுவதற்கான தேவையைத் தோற்றுவிப்பதும் இல்லாதபோது, மக்கள் எப்படித் தயக்கமின்றி சமுதாய ஒட்டுறவுக்கு அவசியமான விதிகளை பற்றியொழுகப் பழகிக் கொணடுவிடுகிறார்கள் என்பதற்கு லட்சோப லட்சக் கணக்கான எடுத்துக் காட்டுகளை நம்மைச் சுற்றிலும் காண்கிறோம்.

இவ்வாறாக, முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்கும் ஜனநாயகம் வெட்டிக் குறுக்கப்பட்ட, அலங்கோலமான, பொய்யான ஜனநாயகம், செல்வந்தர்களுக்கு மட்டுமேயான, சிறு பான்மையோருக்கான ஜனநாயகம். கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் காலத்துக்குரிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் முதன்முதலாய் மகளுக்கான, பெரும்பான்மையோருக்கான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கிறது; அதனுடன் கூடவே சுரண்டாலாளர்களான சிறுபான்மையோரைத் தேவையான அளவுக்கு அடக்கவும் செய்கிறது. மெய்யாகவே முழு நிறைவான ஜவநாயகத்தைத் தோற்றுவிக்க வல்லது கம்யூனிசம் ஒன்று மட்டுமே. எவ்வளவுக்கு எவ்வளவு இது முழுநிறைவானதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமாய் அது தேவையற்றதாகி தானாகவே உலர்ந்து உதிர்கிறது.

வேறுவிதமாய்க் கூறினால், முதலாளித்துவத்தில் அரசெனும் சொல்லின் முறையான அர்த்தத்தைக் குறிக்கும், அதாவது ஒரு வர்க்கம் பிறிதொன்றை, அதுவும், சிறு பான்மையோர் பெரும் பான்மையோரை அடக்குவதற்கான தனி வகைப் பொறியமைவான அரசு இருக்கிறது, சுரண்டப்படும் பெரும்பான்மையோரைச் சுரண்டும் சிறு பான்மையோர் முறையாக அடக்குவதென்றும் இத்தகைய செயல் வெற்றி பெற இயற்கையாகவே, அடக்கியொடுக்கும்பணியில் அளவு கடந்த மூர்க்கமும் மிருகத்தனமும் அவசியமாகிவிடுகிறது; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாகிவிடுகிறது. இந்தவெள்ளத்தில் நடந்துதான் மனிதகுலம் அடிமை முறை, பண்ணையடிமை அமைப்பு, கூலியுழைப்பு ஆகியவற்றின் வழியே சென்று கொண்டிருக்கிறது.

மேலும் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்கையிலும் அடக்கவேண்டியது இன்னும் தேவையாகவே இருக்கிறது, ஆனால் இப்பொழுது அது சுரண்டப்பட்ட பெரும்பான்மையோர் சுரண்டும் சிறுபான்மை

யோரை அடக்குவதாகிறது, அடக்குவதற்கான ஒரு தனி வகை இயந்திரம், ஒரு தனிவகைப் பொறியமைவு-''அரசு இன்னமும் தேவையாகவே இருக்கிறது, ஆனால் இப்பொழுது அது மாறிச் செல்லும் கட்டத்துக்குரிய அரசாய் இல்லை ஏனெனில் சிறுபான்மையோரான சுரண்டலர்களை நேற்றைய கூலி அடிமைகளான பெரும்பான்மையோர் அடக்குவது ஒப்பளவில் மிகச் சாதாரணமான, எளிதான, இயற்கையான பணி ஆகுமாதலால். அடிமைகள் அல்லது பண்ணையடிமைகள் அல்லது கூலி உழைப்பாளர்களின் எழுச்சிகளை அடக்குவதற்கு வேண்டியிருந்ததைப் போலல்லாது மிகச் சொற்ப அளவே இரத்தம் சிந்தும்படி இருக்கும். மனித குலத்துக்கு மிகச் சொற்ப சேதமே உண்டாகும். ஜனநாயகத்தை மிகவும் விரிவாக்கி மக்களில் மிகப் பிரமாண்டமான பெருபான்மையோருக்குக் கிட்டச் செய்வது இப்பணிக்கு ஒவ்வாததல்ல. ஆதலால், அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவின் தேவை மறையத் தொடங்கி விடும். இயல்பாகவே சுரண்டலாளர்கள் மிகச் சிக்கலான பொறியமைவு ஒன்று இல்லாமல் மக்களை அடக்க முடியவில்லை. ஆனால் மக்களால் மிக எளிய ''பொறியமைவு'' கொண்டே, சுரண்டலாளர்களை அடக்கிவிட முவுயும்; பெருமளவுக்குப் ''பொறியமைவு'' இல்லாமலே, ஒரு தனி வகை இயந்திரம் இன்றியே, சாதாரண ஏற்பாடான ஆயுதமேந்திய மக்களின் ஒழுங்கமைப்மைக் கொண்டே (தொழிலாளர்கள், படையாட்கள்பிரதிநிதிகளது சோவியத்துகளைப் போன்ற ஒழுங்கமைப்பு என்று முன்னோடிச் சென்று வரப் போவதைக குறிப்பிடலாம்) இப்பணியைச் செய்துவிடலாம்.

முடிவில், கம்யூனிசம், ஒன்றுமட்டும்தான் அரசை அறவே தேவைற்றதாக்கும். ஏனெனில் கம்யூனிசத்தில் அடக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை; ஒரு வர்க்கம் என்ற அர்த்தத்தில், மக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு எதிரா" முறையான போராட்டம் நடத்துவது என்ற அர்த்தத்தில் ''யாரும் இல்லை''. நாங்கள் கற்பனாவாதிகளல்ல; தனி நபர்கள் அடாச் செயல்கள் புரியக்கூடும், இது சாத்தியமே. தவிர்க்க முடியாதே என்பதையோ, அடாச் செயல்களைத் தடுத்து நிறுத்துவது அவசியமே என்பதையோ நாங்கள் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் முதலாவதாக, அடக்குவதற்கான ஒரு தனிவகை இயந்திரம் இதற்குத் தேவையில்லை; ஆயுதமேந்திய மக்கள் தாமே இதனைச் செய்துவிடுவார்கள். நாரிகமடைந்த மக்கள் திரள் எதுவும் நவீன சமுதாயத்தில் உடனே தலையிட்டு அடிதடிச் சண்டையை நிறுத்துவது போல, அல்லது பெண் ஒருத்தி தாக்கப்படுவதைத் தடுப்பது போல, அவர்கள் இதனைச் சுலபமாகவும் உடனடியாகவும் செய்துவிடுவார்கள். இரண்டாவதாக, சமுதாய ஒட்டுறவுக்குரிய விதிகளை மீறுவதால் வரும் வினைவான இந்த அடாச் செயல்களின் அடிப்படை சமுதாயக் காரணம் மக்கள் உட்படுத்தப்பட்



டுள்ள சுரண்டலும் அவர்களை வதைக்கும் இல்லாமையும் வறுமையுமேதான் என்று நமக்குத் தெரியும். இந்தப் பிரதான காரணம் நீக்கப்பட்டதுடன் அடாச் செயல்கள் தவிர்க்க முடியாதவாறு ''உலர்ந்து உதிரத் ''தொடங்கி விடும். எவ்வளவு விரைவாய், எந்த வரிசையில் நடந்தேறும் என்பது தெரியாது.

கற்பனாவாதப் படைப்புகளை, எழுப்பாமல், மார்க்ஸ் இந்த வருங்காலத்தைப் பற்றி இப்பொழுதே வரையறுத்துச் சொல்லக் கூடியதை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்கும் (படிகள், நிலைகள்) இடையிலுள்ள வேறுபாட்டை மேலும் பூரணமாய் வரையறுத்துச் சொன்னார்.

**மார்க்ஸியம் லெனினியமும் எமது காலமும்**

கலாநிதி யூறி கிராஸின்

# இன்றைய உலகில் பாட்டாளிவர்க்க சர்வதேசியம்

> ஏகாதிபத்தியத்தை எதிர்த்த, சமாதானத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமான போராட்டத்தில் சர்வதேச தொழிலாளி வர்க்கமும், அதன் பிரதான சாதனையான உலக சோஷலிஸமும் நிர்ணயமான சக்தியாகும். சமூக — தேசிய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களிலிருந்தும் சமுதாயத்தை விடுவிக்கும் சக்தியான உழைக்கும் வர்க்கம் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை பிரதான கோட்பாடாகஏற்றுள்ளது. நமது காலத்தின் இந்த முற்போக்கான வர்க்கத்தின் சர்வதேசியம் உலகை புரட்சிகரமாக மாற்றியமைக்கும் போராட்டத்தில் அனைத்து முற்போக்கு, ஜனநாயக ஏகாதிபத்திய விரோத சக்திகளினதும் ஐக்கியத்தை வலுப்படுத்துகிறது.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் அனைத்து நாடுகளையும், தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஜீவாதார நலன்களின் ஒருமைப்பாட்டையும், உலகை புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கான போராட்டத்தில் இவர்களது ஐக்கியத்தையும் வெளிப்படுத்துகிறது.



சர்வதேசியம் என்பது தமது போராட்டத்திலும், ஏனைய வர்க்கங்களுடனான உறவிலும் தொழிலாளி வர்க்கத்தினதும் அனைத்து உழைக்கும் மக்களினதும் சர்வதேச ஒருமைப்பாடாகும். சர்வதேசியம் இந்த முற்போக்கான வர்க்கத்தின் ஒரு திட்டவட்டமான வளர்ச்சியைக் குறிக்கிறது. அத்துடன் மார்க்ஸிய கட்சிகளுக்கிடையிலான உறவுகளை வழிநடத்தும் நியதிகளையும் அதேபோல அரசியல் கோட்பாடுகளையும் ஒழுக்க நெறிகளையும் இது உள்ளடக்கியுள்ளது. புரட்சிகர நிகழ்வு ஆழமடையும்போது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உள்ளுறை வியாபிதமடைகிறது. இதன் அர்த்தம் ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைவதற்கு வேவ்வேறு மக்களது போராட்ட நிலைமைகளின் பிரத்தியேகத்தன்மைகள் எத்தகையதாக இருந்தபோதிலும் இந்த மக்கள் அனைவரினதும் ஐக்கியம் அவசியமானது என்பதாகும்.

பாட்டாளிவர்க்க சர்வதேசியம் தொழிலாளிவர்க்கத்தினது உணர்வுகளையும் எண்ணங்களையும், செயல்களையும் வெளிப்படுத்தும் தார்மீக, அரசியல் நடவடிக்கைப் பாங்கினைக் குறிக்கிறது. இதன் தோற்றமும் வளர்ச்சியும் தொழிலாளி வர்க்கத்திலிருந்து பிரிக்கப்பட முடியாததாகும்.

ஆரம்பத்தில் சர்வதேசியம் தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே உயர்த்திப் பிடிக்கப்பட்ட சித்தாந்த—நடைமுறைக்போட்பாடாக இருந்தது. பின்னர் இதன் செயற்களம் ஒடுக்கப்பட்ட காலனிகளின் மக்களையும் உள்ளடக்கியதாக வியாபித்தது. இதை "அனைத்து நாடுகளினதும் தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்றுபடுங்கள்" என்ற லெனினின் சுலோகம் பிரதிபலித்தது, 1969ல் நடந்த கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசிய மாநாடு மேலும் விரிவான சுலோகத்தை முன்வைத்தது. "ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும்; சமாதானம், தேசிய விமோசனம், சமூக முன்னேற்றம், சோஷலிஸத்திற்குமான பொதுப் போராட்டத்தில் சோஷலிஸ நாடுகளின் மக்களும், முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர்களும் ஜனநாயக சக்திகளும், புதிய விடுதலையுற்ற மக்களும், ஒடுக்கப்பட்ட அனைவரும் ஒன்றுபடுவீர்"

மார்க்ஸிஸ—லெனினிய கட்சிகளினதும் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தினதும் நடவடிக்கைகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் வர்க்க கொள்கையாக உயர்த்தப்பட்டுள்ளது. சர்வதேசியமும் புரட்சிகர உள்ளுறையும் சோஷலிஸ ரீதியில் உலக புனர் நிர்மாணிப்பதில் பாட்டாளி வர்க்கத்தினது வர்க்கக் கொள்கையின் இரு பக்கங்களாகும். பாட்டாளி வர்க்க சர்வதேசியம் செயல் முறைப் புரட்சிகர நடவடிக்கையின் ஒரு ஆயுதமாகும். 1917 அக்

டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் பின் இது உண்மையான சோஷலிஸத்தினது ராஜ்ய கொள்கையாகும்.

## செயலில் சர்வதேசியம்

சோவியத் யூனியன் உலகின் ஒரே ஒரு சோஷலிஸ ராஜ்யமாக இருந்தபோது அது சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கும், புரட்சிகர—தேசிய விமோசன இயக்கங்களுக்கும் ஆதரவளித்தது. துருக்கி மக்கள் தமது சுதந்திரத்தைப் பேணிக்காக்க உதவியது; பிரிட்டிஷ் கலோனியலிஸ்ட்டுகளை எதிர்த்த போராட்டத்தில் ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளித்தது; ஏகாதிபத்தியத்தால் முட்டுக்கொடுக்கப்பட்ட நிலப்பிரபுத்துவ—ராணுவவெறிக் கும்பலை எதிர்த்துப் போராட சீனமக்களுக்கு உதவியது. மொங்கோலியப் புரட்சியின் வளர்ச்சிக்கு சோவியத் நாடு உதவியது. பிராங்கோலின் கலகக்காரர்களையும், இத்தாலி—ஜேர்மன் ஊடுருவல்காரர்களையும் எதிர்த்துப்போராட ஸ்பானிஷ் குடியரசுவாதிகளுக்கு ஆதரவு வழங்கியது.

உலக சோஷலிஸ அமைப்பின் உதயத்துடன் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ராஜ்ய உறவுகளின் கோட்பாடாக, புதிய உலகை நிர்மாணிக்கும் நாடுகளின் அடிப்படைக் கோட்பாடாக மாறியது.

2வது உலக யுத்ததிற்குப் பின்னர் எழுச்சியுற்ற ஏறத்தாழ எல்லா பிரபல புரட்சிகர இயக்கங்களும் உலக சோஷலிஸத்தினதும் முற்போக்கு இயக்கத்தினதும் சர்வதேசிய ஒருமைப்பாட்டை ஆதாரமாகக் கொண்டவையாகவே இருந்தன. சோஷலிஸ நாடுகளின், குறிப்பாக சோவியத் யூனியனின் ஆதரவின்றேல் கியூபா அதனது சோஷலிஸப் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாத்திருக்க முடியாது. பிரெஞ்சு, ஜப்பான், அமெரிக்க ஏகாதிபத்தியங்களைஎதிர்த்த கடுமையான போராட்டத்தில் வீரமிக்க வியத்நாம் மக்களால் தமது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் புரட்சியின் ஆதாயங்களையும் பாதுகாக்க முடிந்தமைக்கு உலகமுற்போக்கு சக்திகளின் ஆதரவும் சோஷலிஸ நாடுகளின் பாரிய உதவியுமே காரணமாகும்.

## சர்வதேசியத்தின் கல்லூரி

சமாதானத்திற்கும் சமூக முன்னேற்றத்துக்குமான போராட்டத்தில் மனிதகுலத்தின் மிகப் பெரும் பகுதி பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்தியாகும். ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தில் பங்குபற்றும் பாட்டாளி வர்க்கம் சேராத பகுதிகளின் கருத்துக்களையும் நிலைபாடுகளையும் தேவைகளையும், நலன்களையும் புரிந்து கொள்வதுஅவசியம்,



தொழிலாளி வர்க்கத்துடன் சேர்ந்து போராடும் போது இவை சர்வதேசியக் கல்லூரிக் கூடாகச் செல்கின்றன. சர்வதேச தொழிலாளி வர்க்கத்துடனும் உலக சோஷலிஸத்துடனும் ஒருமைப்பாட்டைவலுப்படுத்திக் கொள்வதினதும் அவசியத்தை இவை உணர்கின்றன.

உலக வியாபிதமான தொழிலாளி வர்க்க ஒருமைப்பாடும், உலக சோஷலிஸம் வலுப்பட்டமையும் ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனப் போராட்டத்தின் வெற்றிக்குவெளிப்புற ஆதாரசக்தியாகஇருந்தன. இந் நாடுகளில் பல முற்போக்கான வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ளன.

வரலாறும் அனுபவமும்

இகொர் ஷெவ்ட்ஸ்
இவான் யுடின்

# சோவியத்தில் ஒரு கட்சி முறை இருப்பது ஏன்?

**சோவியத் யூனியனில் உள்ள ஒரு கட்சி முறை பற்றி மேலும் தெரிந்துகொள்ள பல வாசகர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். சோஷலிசத்தின் கீழ் பல கட்சி முறையை மார்க்ஸிய-லெனினியம் அனுமதிக்கிறதா?**

சோஷலிசத்தின் கீழ் பல கட்சிமுறையிருக்கும் சாத்தியப்பாட்டை மார்க்ஸிய-லெனினிஸ்ட்டுகள் நிராகரிக்கவில்லை என்பதை முதலில் குறிப்பிட்டாக வேண்டும். சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னரும், தொழிலாள மக்களின் விமோசனத்திற்காகவும் சோஷலிசத்திற்காகவும் போராடும் கட்சிகளுடன் ஒத்துழைக்க அவர்கள் எப்போதும் தயாராக இருந்திருக்கிறார்கள். ஏனைய கட்சிகளுடன் மார்க்ஸிய-லெனினிய கட்சிகளின் ஒத்துழைப்பு பல்கேரியா, வியத்நாம், ஜே. ஜ. கு., செக்கோஸ்லவாக்கியா முதலிய சோஷலிஸ நாடுகளில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்நாடுகளில் பல கட்சி முறையே உள்ளது.

சோவியத் யூனியனில் மாபெரும் அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்பின்போதும், பின்னர் தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியை வலுப்படுத்துவதற்கான போராட்டத்தின்போதும் நிலவிய பிரத்தியேகமான சூழலிலேயே ஒரு கட்சிமுறை தோன்றியது.

அக்டோபர் புரட்சி நடந்த வேளையில் ரஷ்யாவில் பல கட்சிகள் இயங்கின. இவற்றுள் அதிதீவிர பிற்போக்குக் கட்சிகள், லிபரல் கட்சிகள், அராஜக கட்சிகள், சமூக—ஜனநாயகக் கட்சிகள் ஆகியன இருந்தன. இவை அனைத்



தும் மக்களின் செல்வாக்கைப்பெற போட்டி போட்டதுடன், தாம் நாட்டில் தலைமைப் பாத்திரத்தை பெற்றுள்ளதாகப் பாத்தியதை கொண்டாடின. சுரண்டல் அமைப்பினதும், நிலப்பிரபுக்களினதும் பூர்ஷ்வாக்களினதும் பாதுகாவலர்களான இக்கட்சிகள் புரட்சியின்போதும் அதன் பின்னரும் புரட்சியை எதிர்த்து முன்வந்தன. அதை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்ததுடன் உள்நாட்டு யுத்தத்தையும் கட்டவிழ்த்துவிட்டன. இதுவே இவற்றின் அழிவுக்கு அடிகோலியது. இவையும் ஏனைய எதிர்ப்புரட்சிச் சக்திகளும் படுதோல்வியடைந்தன.

பாட்டாளி வர்க்கம் சாராத மென்ஷ்விக், சமூக—ஜனநாயகக் கட்சிகளும் தோல்வியையே தழுவிக்கொண்டன இவற்றின் தோல்விக்கான பிரதான காரணம் புரட்சியைப் பொறுத்த இவற்றின் மனோபாவமும், சமரஸம் செய்யும் இவற்றின் சந்தர்ப்பவாதக் கொள்கையுமேயாகும். கம்யூனிஸ்டடுகளின் பரம எதிரியாகத் தன்னைக் கருதிய இடது சோஷலிஸ்ட்—புரட்சிக்காரர்களின் தலைவரான எம். ஸ்பிரிடினோவா பின்வருமாறு கூறினார்:'' வலதுசாரி சமூக—ஜனநாயகவாதிகளும் மென்ஷ்விக்குகளும் அடக்குமுறைகளால் முறியடிக்கப்படவில்லை... மாறாக அவர்களின் சமரசம் செய்து கொள்ளும் கொள்கையே அவர்களது தோல்விக்கான காரணமாகும். அவர்களை வெகுஜனங்கள் நிராகரித்தார்கள். குபேர்னியா, யுயெஸ்ட் காங்கிரஸ்கள் சுதந்திரமாகவே கூட்டப்பட்டன. அடக்குமுறைகளோ கைது செய்யப்படுத்தல்களோ இருக்கவில்லை. கருத்துக்களின் சுதந்திரமான மோதுதலும் கட்சிகளின் விவாதங்களும் நடந்தன. எல்லா இடங்களிலுமிருந்துவந்த தேர்தல் முடிவுகள் சோஷலிஸ—புரட்சிக்காரர்களினதும் மென்ஷ்விக்குகளினதும் சமரஸக் கட்சிகளையும் பொறுத்து வெகுஜனங்களின் வெறுப்பைத் துலாம்பரப்படுத்தின. அவர்கள் தமது போக்காலேயே தம்மை அழித்துக்கொண்டனர்''.

சோவியத் ஆட்சியின் முதல் தினங்களிலிருந்தே இடது சோஷலிஸ்ட் புரட்சியாளர்களும் மென்ஷ்விக்குகளும் எதிர்ப்புரட்சியாளர்களின் முகாமில் சேர்ந்ததுடன். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிராகச் செய்யப்பட்டனர். மிக மிக பிற்போக்கான சக்திகளுடன் அணி அமைத்துக் கொண்ட இவர்கள் சோவியத் ஆட்சியை எதிர்த்து அவர்கள் சதிகளை மேற்கொண்டதுடன், கலகங்களையும் தூண்டி விட்டனர். இவ்வாறு புரட்சியினதும் சோஷலிஸத்தினதும் சத்துராதிகளாக அவர்கள் மக்களின் பார்வையில் தம்மை அம்பலப்படுத்திக் கொண்டார்கள்.

உழைக்கும் விவசாயிகளின் கட்சியாக முன்வந்த இடது சோஷலிஸட்—புரட்சிக் காரர்களுடனான கம்யூனிஸ்ட்டுகளின் உறவு வேறுவடிவத்தைப் பெற்றது. புரட்சியின்

ஆரம்பகாலத்தில் அவர்கள் கம்யூனிஸ்ட்டுகளுடன் ஒத்துழைத்தனர். இவர்களது பிரதிநிதிகள் சோவியத் அரசாங்கத்தில் இடம் பெற்றனர். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடது சோஷலிஸ்ட் புரட்சிக்காரர்களுக்குமிடையிலான உறவினை 'இடதுசாரி கம்யூனிஸம்—சிறுபிள்ளைவாதக் கோளாறு' என்ற தனது நூலில் லெனின் பின்வருமாறு விவரித்தார்: "அக்டோபர் புரட்சியின் ஆரம்பத்திலிருந்தே சோஷலிஸ்ட் புரட்சிகர விவசாயத்திட்டத்தை முழுமையாகவே— ஒரு சிறு மாற்றமுமின்றி ஏற்றுக்கொண்டதன் மூலம் குட்டி—பூர்ஷ்வா விவசாயிகளுடன் நாம் சம்பிரதாயபூர்வமற்ற ஆனால் மிகமுக்கியமான (மிகமிக வெற்றிகரமான) அரசியல் அணியை அமைத்துக் கொண்டோம், மறுக்க முடியாத சமரஸத்தை நாம் அவர்களுடன் செய்துகொண்டோம். 'கல்லுருளை'க்கு அவர்களை நாம் இலக்காக்காது அவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவே நாம் விரும்புகிறோம் என்பதை விவசாயிகளுக்கு உணர்த்தவே நாம் இதைச் செய்தோம். இடது சோஷலிஸ்ட்—புரட்சிக்காரர்களுடன் நாம் அரசியல் அணியை அமைக்க ஆலோசனை கூறினோம் பின்னர் அதை அமைத்தோம்.) இவர்கள் சோவியத் அரசாங்கத்திலும் சேர்ந்து கொண்டனர். ஆனால் பிரெஸ்ட்—லிடோவ்ஸ்க் உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர் இவர்கள் இந்த அணியை கலைத்தனர், பின்னர் 1910 ஜூலையில் ஆயுதகலவரத்தை ஆரம்பித்தனர், தொடர்ந்து எம்மை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை நடத்தினர்".

சோஷலிஸ்ட்—புட்சிகரக் கட்சியின் பெருந் தொகையான உறுப்பினர்கள் தமது தலைவர்களின் ஆபத்தான போக்கை எதிர்த்து அக்கட்சியை விட்டு வெளியேறினர். இறுதியில் சோஷலிஸ்ட்—புரட்சிகரக் கட்சி சிதைந்து சின்னபின்னமாகி ஒரு சிறு கூட்டம் எதிர்ப் புரட்சிக் காரர்களின் கூடாரமாகியது.

பூர்ஷ்வாக் கட்சிகளினதும் குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளினதும் மக்கள் விரோத, சுரண்டல் அமைப்பினைப் பாதுகாக்கும் கொள்கையை உழைக்கும் மக்கள் தமது அனுபவத்தில் கண்டு உணர்ந்ததால் அவர்கள் கம்யூனிஸ்ட கட்சியின் பதாகையின் கீழ் திரண்டனர், அதைத் தமது அரசியல் தலைவனாக ஏற்றனர்.

இவ்வாறுதான் சோயியத் யூனியனில் ஒரு கட்சி அமைப்பு உருவாகியது. இதற்கான காரணம் பூர்ஷ்வா சித்தாந்திகள் கூறுவதைப் போல மார்க்ஸிஸ—லெனினிஸம் பல கட்சி அமைப்பை நிராகரிப்பதல்ல. மாறாக பூர்ஸ்வா-குட்டி பூர்ஸ்வா கட்சிகள் தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியையும் புரட்சியையும் எதிர்த்து ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்தமையாகும் புரசிகரமான சமூக மாற்றங்களை எதிர்த்ததன் மூலம் எதிர் நடவடிக்கை எடுக்க அவை அரசாங்கத்தையும் உழைக்கும்மக்களையும் நிர்ப்பந்தத்தின. வேறு வார்த்தையில் இவை தமது அழிவைத்தாமே தேடிக்கொண்டன.



அல்பர்ட் ஸிரோட்சின்

# உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகம்

சோஷலிஸம் மட்டும்தான் சமுதாயத்தில் உண்மையான ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதுடன் பேணுவது ஏன் என்று பல வாசகர்கள் கேட்கிறார்கள். முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஜனநாயகத்திற்கும் சோஷலிஸ ஜனநாயகத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன என வினவுகிறார்கள். ''எஸ்.ரி.பி.'' ஆசிரியர் குழு உறுப்பினரின் பதிலை இங்கு தருகிறோம்.

ஜனநாயகம், மனித உரிமை பற்றி ஆதிகாலம் தொட்டே முடிவில்லாத வாதப் பிரதிவாதம் நடைபெறுகிறது. ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு ஆதரவாகவே வரலாற்றின் நிகழ்வுப் போக்கு எப்போதும் இருந்துள்ளது. எனினும் எல்லாக் காலங்களிலும் ஒரு கேள்வி மேலோங்கி நின்றுள்ளது சுதந்திரத்திலிருந்தும் சிவில் உரிமைகளிலிருந்தும் பயன்பெறுபவர்கள் யார்? யாருடைய நலன்களை இவை பேணுகின்றன?

முதலாளித்துவம் தோன்றி வளர்ச்சியுற்றபோது பூர்ஷ்வாக்கள் விரிவான ஜனநாயகத் திட்டத்தை முன்வைத்தனர். இது பிரிட்டன், பிரான்ஸ், மற்றும் பல நாடுகளின் ஜனநாயக சம்பிரதாயங்களைத் தோற்றுவித்தன குறிப்பாக 1776 ஆம் வருட சுதந்திரப் பிரகடனம் பெருமுக்கியத்துவமிக்கதாக இருந்தது. இதை முதலாவது மனித உரிமைப் பிரகடனம் என்று கார்ல் மார்க்ஸ் வர்ணித்தார். தமது ஆட்சி உதித்த காலத்தில் பூர்ஷ்வாக்கள் பிரகடனப்படுத்திய சுதந்திரங்களும் உரிமைகளும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதாயங்களே. ஆனால் இவை மட்டுப்படுத்தப்பட்டனவாகவே இருந்தன. உற்பத்திச் சாதனங்கள் மீதான

தனியார் சொத்துடைமையே இவற்றின் குணாம்சத்தை நிர்ணயித்தது. மூலதனத்தின் ஆதிக்கம் வலுப்பட்டதோடு முதலாளித்துவ சமுதாயத்தில் ஜனநாயகத்தினது மட்டுப்படுத்தப்பட்ட குணாம்சம் மேலும் துலாம்பரமாகியது உதாரணத்திற்கு மற்றெல்லா உரிமைகளிலும் பார்க்க தனியார் சொத்துடைமை உரிமை 'புனிதமிக்கதாக' கருதப்பட்டது உற்பத்திச் சாதனங்களினது நலன்களுக்கு ஏனைய உரிமைகள் அனைத்துமே கீழ்ப்படிந்தவையாக்கப்பட்டன, இவை மேலும் மேலும் மட்டுப்படுத்தப்பட்டதுடன் வலுவற்றவையாக்கப்பட்டன.

சோஷலிஸ ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம் வரலாற்றிலே முதல் தடவையாக அரசு தொழிலாளர்களினது, லட்சோப லட்சம் வெகுஜனங்களினது அரசாக மாறியமையாகும். இந்த அரசு வெறும் பிரகடனமல்ல, மாறாக எதார்த்தமானதாகும். ஏனெனில் இது உற்பத்திச் சாதனங்களின் பொதுச் சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டதாகும். சோஷலிஸ ஜனநாயகம் விஸ்தாரமான சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளையும் தனிநபர் உரிமைகளையும் பிரகடனப்படுத்தியதுடன் இவை நடைமுறையில் செயற்படுத்தப்படுவதையும் உத்தரவாதப்படுத்துகிறது. உற்பத்திச் சாதனங்களின் பொதுச் சொத்துடைமையும், மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழிந்துபட்டமையும் இதை உத்தரவாதப்படுத்தியதுடன்; மாமூலான சமத்துவத்திலிருந்து நிஜமான, உண்மையான சமத்துவத்திற்கான மாற்றம் உண்மையிலேயே ஏற்பட்டது.

சோவியத் ஜனநாயகம் அனைத்துப் பிரஜைகளினதும் சமத்துவத்தை அரசியல் யாப்புரீதியிலேயே உத்தரவாதப்படுத்துகிறது. வேலைசெய்வதற்கான உரிமை; விருப்பம், ஆற்றல், பயிற்சி, கல்வி ஆகியவற்றிற்கு ஏற்ற வேலையைத் தெரிவு செய்வதற்கான உரிமை, வசிப்பிடத்தைத் தெரிவு செய்யும் உரிமை உட்பட பரவலான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதாரம், அரசியல், சமூகம், கலாசார வாழ்வு ஆகிய அனைத்துத் துறைகளிலும் சரிநிகர் சமத்துவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது சோவியத் ஜனநாயகம் உரிமைகளும் சுதந்திரங்களும் கடமைகளுடனும் பொறுப்புகளுடனும் ஐக்கியப்பட்டுநிற்பதையும் சமுதாயத்தினது நலனும்தனிநபர் நலனும் ஒத்திசைவாக இணைவதையும் உறுதிப்படுத்துகிறது.

பூர்ஷ்வா அரசியல் யாப்புகள் சமத்துவ உரிமைகளைப் பிரகடனப்படுத்திய போதிலும் இவற்றை நடைமுறையில் அமுல்படுத்தும் கட்டாயப் பொறுப்பை அரசின் மீது சுமத்தவில்லை. தனது பலத்திற்கு ஏற்ப இந்த வாய்ப்புகளை ஈட்டிக் கொள்ளும் 'சுதந்திர'த்தை அது தனி நபர்களுக்கு வழங்குகிறது.



ஆனால் சுரண்டல் வர்க்கங்கள் அற்ற சோஷலிஸ சமுதாயத்தில் தான் இந்த வாய்ப்புகள் இருக்கமுடியும். சோவியத் யூனியனில் மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் மூலம் உழைக்கும் மக்கள் ஆட்சியதிகாரத்தைச் செயற்படுத்துகிறார்கள். இவற்றிற்கு மொத்தம் 23 லட்சம் பேர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுள் 990 ஆயிரம் பேர்கள் தொழிலாளர்களும், 580 ஆயிரம் பேர்கள் விவசாயிகளுமாவர். அத்தோடு பிரதிநிதிகளுடன் சேர்ந்து சோவியத்துக்களின் பணிகளில் 350 லட்சம் முன்னணி ஊழியர்கள் பங்கெடுக்கிறார்கள் சோவியத் அரசாங்கத்தினதும் பொருளாதார முகாமை அமைப்புகளினதும் பணிகளில் ஒவ்வொரு ஐந்து பிரஜைகளிலும் ஒருவர் பங்குபற்றுகிறார்.

சோவியத் ஜனநாயகத்தின் இன்னுமொரு பிரிக்கப்பட முடியாத அம்சம் அரசாங்க அமைப்புகளின் மீதான மக்கள் கட்டுப்பாட்டு அமைப்பாகும். மக்கள் கட்டுப்பாட்டு அமைப்புகளுக்கு சுமார் 100 லட்சம் பேர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். உற்பத்தி நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்குபற்றுவது மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. தொழிலகங்களை நிர்வகிக்கும் 139 நிலையான உற்பத்தி மாநாடுகளின் பணிகளில் ஏறத்தாழ 60 லட்சம் தொழிலாளர்கள் பங்குபற்றுகிறார்கள்.

சோஷலிஸ ஜனநாயகத்தை விருத்தி செய்வதில் தொழிற் சங்கங்கள், வாலிபர்—மாதர் ஸ்தாபனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் முதலிய வெகுஜன ஸ்தாபனங்கள் மாபெரும் பாத்திரத்தை வகிக்கின்றன. இவை அனைத்தும் அரசையும் பொது விவகாரங்களையும் நடத்துவதிலும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விவகாரங்களை நிர்வகிப்பதிலும் இவை பங்குபற்றுவதை உறுதிப்படுத்துகின்றன.

உழைக்கும் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும், பாதுகாகும் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சமுதாயத்தினது அரசியல் அமைப்பின் அடித்தளமாக உள்ளது. அதுவே அதன் தலைமைச் சக்தியாகவும், வழிநடத்தல் சக்தியாகவும் உள்ளது. கட்சியில் 175 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர் இவர்களில் 43.4 சதவீதத்தினர். தொழிலாளர்களும், 12.8 சதவீதத்தினர் கூட்டுப்பண்ணை விவசாயிகளும், 43.8 சத வீதத்தினர் தொழில்நுட்ப, விஞ்ஞான, கலாசார துறையினர்களும் ஆவர்.

இதனால்தான் சோவியத் சோஷலிஸ ஜனநாயகம் உண்மையானதாகும். நாட்டின் ராஜ்யத்தையும், பொது விவகாரத்தையும், உற்பத்தியையும் நிர்வகிப்பதில் லட்சோப லட்சம் மக்கள் பங்குபற்றுவதிலேயே ஜனநாயகத்தின் விஸ்தாரம் உள்ளது. முதலாளித்துவ, நாடுகளுக்கு மாறாக நாட்டின் விவகாரங்களை நிர்வகிப்பதில் ஒவ்வொரு பிரஜையும் பங்குபற்றுவதை சோஷலிஸ ஜனநாயகம் உத்தரவாதப்படுத்துகிறது.

**சோஷலிஸமும் இன்றைய உலகும்**

# முன்னணி முதலாளித்துவ நாடுகளைவிட பபொஉக நாடுகள் இரட்டிப்பு வளர்ச்சி பெற்றுள்ளன

ப. பொ. உ. க. வின் 35வது தொடர் கூட்டம் பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில் 1981 ஜூலையில் நடந்தது. இதற்கு லாசோஸ், அங்கோலா, ஆப்கானிஸ்தான், யேமன், மொஸாம்பிக், எதியோப்பியா ஆகிய நாடுகளிலிருந்து பார்வையாளர்களும் வந்திருந்தனர்.

1971 ஜூலையில்—பத்தாண்டுகளுக்குமுன்— அங்கீகரிக்கப்பட்ட சோஷலிஸ பொருளாதார ஒருமைப்பாட்டிற்கான ப. பொ. உ. க. பன்முக வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவது பற்றியும் 1980களில் ப. பொ. உ. க அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புகளை ஆழப்படுத்துவது—சீர்மைப்படுத்துவது பற்றியும் விவாதிக்கப்பட்டது அதில் 1981-1985க்கான திட்டமிடல், விஞ்ஞான தொழில்நுட்ப, தேசிய பொருளாதாரத் திட்டத்திலான பிரச்னைகளுக்கே முக்கிய இடமளிக்கப்பட்டது.

1970களுடன் ஒப்பிடும்போது 1980ல் இந்த நாடுகளின் மொத்த தேசிய வருவாய் 66சதவீதத்தால் அதிகரித்துள்ளதோடு அவற்றின் மொத்த தொழிலுற்பத்தி 84 சதவீதத்தாலும் உயர்ந்துள்ளது விவசாய உற்பத்தியும் கடந்த பத்தாண்டுகளில் உயர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் அதன் வளர்ச்சி 1966-1970 காலப்பகுதியைவிட 25 சதவீதத்தாலதிகரித்துள்ளது. கடந்த தசாப்தத்தில் பு. பொ.. உ. க. நாடுகள், தேசிய வருமானம் மற்றும் தொழில் உற்பத்தியில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளைவிட இரட்டிப்பு வளர்ச்சியைக் காட்டியுள்ளன.



தமது நாடுகளின் வளர்ச்சிகள் அவ்வந்த நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் முன்னணிப் பாத்திரத்துடன் விடுவிக்க முடியாத விதத்தில் பிணைக்கப்பட்டுள்ளன என்று வந்திருந்த பிரதிநிதிகள் குறிப்பிட்டார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 3.3 தடவைகளால் அதிகரித்து இப்போது 12100 கோடி ரூபிள்களை எட்டியுள்ளது. பெரும்பாலான இந்த நாடுகளின், இயந்திரங்கள், சாதனங்கள், எண்ணெய் இரும்புக் கனிஜம், பாவனைப் பொருட்கள் என்பவற்றின் பெருந்தொகையான இறக்குமதித் தேவையை பரஸ்பர விநியோகங்கள் பூர்த்திசெய்கின்றன. 1980ல் அந்நாடுகளின் பரஸ்பர விநியோகங்கள் அவற்றின் இறக்குமதியை விட மூன்றிலிரு மடங்கு அதிகமாகும்.

இந்நாடுகளின் ஒத்துழைப்புகளை ஆழமாக்கி, சீராக்குவதையும், சோஷலிஸ பொருளாதார ஒருமைப்பாட்டை அபிவிருத்தியாக்குவதையும் குறியிலக்காகக் கொண்டதும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளால் உருவாக்கப்பட்டதுமான ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கையின் பிசகற்ற தன்மையை, விரிவான இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலான அனுபவம் உறுதிசெய்துள்ளது என்று ஏகமனதாக வலியுறுத்தப்பட்டது ப.பொ. உ.க, வின் நடவடிக்கைகளது கோட்பாடுகள், நோக்கங்கள், வடிவங்கள், முறைகள் என்பவற்றின் மாறுபட்ட சூழலிலும் நடக்கக்கூடிய தன்மையை இந்த அனுபவம் உறுதிசெய்துள்ளது.

தமக்கிடையிலான ஒத்துழைப்புகளை நேர்த்தியாக்கும், ஆழப்படுத்தும் அதே நோக்கில் ப.பொ.உ.க. நாடுகள், ஏனைய சோஷலிஸ, வளர்முக, மற்றும் முதலாளித்துவ நாடுகளுடனும் சமதையான பரஸ்பர பயன்மிகு பொருளாதார ஒத்துழைப்புகளையும் அதிகரித்தே வருகின்றன. சர்வதேச உழைப்புப் பிரிவினையிலும் அவை பங்குபற்றுகின்றன தமது சமாதானபூர்வமான அயல்நாட்டுக் கொள்கையை மேற்கொள்ளும் அதே வேளையில், நியாயமான ஜனநாயக அடிப்படையில் சர்வதேச பொருளாதார உறவுகளை ஏற்படுத்தி புதியதோர் சர்வதேச பொருளாதார ஒழுங்கை அறிமுகப்படுத்துவதற்கென்று உருவமைக்கப்பட்ட முயற்சிகளுக்கும் அவை திடமான ஆதரவை நல்குகின்றன.

ப.பொ.உ.க. தீர்மானித்த ஒப்பந்தங்களினடிப்படையில், அங்கத்துவ நாடுகள் பின்லாந்து. ஈராக் மெக்ஸிக்கோவுடனெல்லாம் பன்முக ஒத்துழைப்புகளைப் பேணுகின்றன. பன்முகமானவையுட்பட தமது பொருளாதார உறவுகளை லாவோஸ், அங்கோலா, ஆப்சானிஸ்தான்,

யேமன், மொஸாம்பிக், எதியோப்பியா மற்றும் வளர்முக நாடுகளுடன் அவை தமது பொருளாதார உறவுகளை விரிவாக்கிவருகின்றன. அங்கத்துவ நாடுகளிலிருந்து பொருளாதார, தொழில்நுட்ப உதவிகளைப் பெறுகின்ற புதிதாக விடுதலைபெற்ற நாடுகளின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் 62யிலிருந்து 90 ஆக அதிகரித்துள்ளதோடு அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட கடனும் 2.1 தடவைகளால் அதிகரித்துள்ளது.

வித்தியாசமான சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையிலான சமாதான சகஜீவன கோட்பாடுகளிலிருந்து, வந்திருந்த பிரதிநிதிகள் உறுதிமொழியளித்தார்கள். பாகுபாடுகளற்ற, பொறுப்புகளை நிறைவேற்றுதல், சமத்துவம், பரஸ்பர உதவிகள் என்பவற்றினடிப்படையில் முதலாளித்துவ நாடுகளிடன் ஸ்திரமான பொருளாதார, விஞ்ஞான.தொழில்நுட்ப உறவுகளை வளர்த்துக் கொள்ள தமது நாடுகள் தயாராயிருக்கின்றன என்பதே அந்த உறுதி மொழியாகும்.



# தனிநபர் சுதந்திரம்

எமது காலத்தின் இரண்டு சமூகமுறைகளாகிய சோஷலிஷம், முதலாளித்துவம் என்பவற்றில் தனிநபர் சுதந்திரம் முக்கியமானதோர் பிரச்னையாக உள்ளது. இது அரசியல், சித்தாந்தம், நாளாந்த வாழ்க்கை என்பவற்றின பல பிரச்னைகளை உள்ளடக்கியதாக உள்ளது. ''சுதந்திரம் பற்றிய உன்னதமான கருத்துக்கள்'' என்பது குறித்து ஏகாதிபத்தியப் பிரச்சாரகர்கள் நன்றாகப் பேசிவருகிறார்கள்.

பூர்ஷுவாக்கள் வரலாற்றுரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு வர்க்கமாக இருந்த காலத்தில், அதாவது சில நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட தனிநபர் சுதந்திரம் பற்றிய கருத்துக்களையே ஏகாதிபத்தியப் பேச்சாளர்கள் இன்றும் பிரயோகித்து வருகிறார்கள். சுரண்டும் வர்க்கமொன்று சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய எண்ணக்கருக்களிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டு, தனது சுயநல விருப்புக்களையே கொண்டதாக இருக்கின்றது. உழைப்புச் சுதந்திரம், மனிதனுடைய திறமைகளையும், ஆற்றல்களையும் சுதந்திரமாக வெளிப்படுத்தல் என்பனவபற்றிப் பேசாமல் தனியார் நலன்கள், தனியார் நிறுவனங்கள், தனியார் வியாபாரங்கள், தனியார் போட்டிகள் என்பவை குறித்தும், கட்டுப்பாடற்ற சுயநோக்கு, வன்முறை என்பவற்றிற்கான உரிமை குறித்துமே பூர்ஷுவாக்கள் பேசிவருகிறார்கள்.

## சுதந்திரத்தின் பிரதான பண்பு உழைப்பேயாகும்

பூர்ஷுவாக் கருத்துக்களைப் போலல்லாது விஞ்ஞான சோஷலிஸம் பொருள்முதல் உற்பத்தியையும், ஆக்கபூர்வமான உழைப்பையும் மனிதவாழ்க்கையின் பிரதான போக்குகளாகக் கருதுகிறது. இதுபற்றி லெனின், ''முதலாளித்துவத் தளையிலிருந்து உழைப்பினை விடுதலைசெய்வதற்கு எதிர்த்திசையில் சுதந்திரம் செயற்படுமேயாயின்

அச்சுதந்திரம் வெறும் ஏமாற்றாகவே இருக்கும்.''[1] என்று குறிப்பிட்டுள்ளார். சோஷலிஸத்தின் கீழ் உழைப்பே சுதந்திரத்தின் பிரதான பண்பாக உள்ளது. சோவியத் சமுதாயத்தினதும், சோஷலிஸ சமாஜ நாடுகளினதும் அனுபவத்திலிருந்து சுதந்திர உழைப்பு என்னவென்பதை அறிந்து கொள்ளலாம். மார்க்ஸிஸ—லெனினிஸ நோக்கின் உண்மை நிலையினை வரலாறு மீண்டும் மீண்டும் உறுதிசெய்கிறது: உழைப்பின் சுதந்திரமே தனிமனித சுதந்திரத்தின் பிரதான நிபந்தனையாக இருக்கிறது. எனவே சோஷலிஸத்தின் கீழ் உழைப்பின் பாத்திரமே அடிப்படைப் பிரச்னையாக இருக்கிறது. அடிப்படைச் சமூக—பொருளாதார உரிமையான, உழைப்பதற்கான சட்டபூர்வமான உரிமை மனித சுதந்திரத்தின் பிரதான உறுதிப்பாடாக உள்ளது. அனைவருக்கும் வேலை வழங்குவதற்கான திடமான உறுதியினை வழங்குவதன்மூலம் நீண்டகால வாழ்க்கைக் குகந்த சமூக அமைப்புமுறையாக சோஷலிஸம் திகழ்கிறது.

சகல தனிமனித சுதந்திரங்களினதும் அடிப்படையாக உழைப்புச்சுதந்திரத்தைப்பற்றிப் பேசும்போது சோஷலிஸ சூத்திரத்தின் ஆரம்ப பகுதியான ''ஒவ்வொருவருக்கும் அவருடைய திறமைக்கேற்ற...'' என்பதனை நினைவுகூர்வது சாலப் பொருத்தமானதாகும். இக்கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை நோக்கி சோவியத் சமுதாயம் சென்றுகொண்டிருக்கிறது. மனிதகுல தேவைகளைப் பூர்த்திசெய்வதில் உழைப்பின் பாத்திரத்தின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்வது இன்று சோஷலிஸத்தின் பிரதான லாபங்களில் ஒன்றாக உள்ளது.

முதலாளித்துவ நாடுகளிலும் மக்களின் வாழ்க்கைமுறை குறிப்பாக மாற்றமடைந்து வருகிறது. சிறப்பான தொழில் வசதிகள், வாழ்க்கை வசதிகள் என்பவற்றை ஏற்படுத்துவதற்காக ஆளும் வட்டாரங்களை அவர்களின் போராட்டம் நிர்ப்பந்தித்து வருகிறது. அதே நேரத்தில் நவீன முதலாளித்துவ சமுதாயத்தில் சுரண்டல்முறை மேலும் அதிகரித்து வருகிறது.

முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்களை எதிர்நோக்கும் மிக வருத்தும் பிரச்னைகளில் வாழ்க்கை ஸ்திரமின்மையும் ஒன்றாகும். கடுமையான வர்க்கப் போராட்டங்களில் வென்றெடுக்கப்பட்ட பொருள்முதல் நிலைபாடுகளை முதலாளித்துவ பொருளாதாரத்தின் நெருக்கடி நிலைமைகள் மேலும் மோசமாக்குகின்றன. தொடர்ந்து செல்லும் பணவீக்கம், ஆயுதப்போட்டி, வேலையில்லாத் திண்டாட்டத்தின் வளர்ச்சி என்பன உழைக்கும் மக்களின் பொருள்முதற் சாத்தியப்பாடுகளை மேலும் வெட்டிக்

1. வி.ஐ. லெனின், திரட்டு நூல்கள், பாகம். 29, பக். 351



குறைக்கின்றன. உத்தியோகபூர்வ ஏழ்மைக்கோட்டின் கீழ் லட்சக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள்.

வாழ்வதற்கான, சிந்திப்பதற்கான, ஆக்கபூர்வமாக உழைப்பதற்கான சுதந்திரமே ஒருவரைத் திருப்தி செய்யத் தக்க சுதந்திரமாகும்.

## சோஷலிஸம் தனிநபர் சுதந்திரத்தினை உறுதிசெய்கிறது

உண்மையான சோஷலிஸம் தனிநபரின் ஆன்மீக சுதந்திரத்தை உறுதிசெய்கிறது. சோ. சோ. கு. ஒ வில் இச்சுதந்திரம் சட்டபூர்வமாக உறுதிசெய்யப்பட்ட கல்வி கற்கும் உரிமை, கலாச்சார லாபங்களை உபயோகிக்கும் உரிமை, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலைச் சாதனைகளை உபயோகிக்கும் உரிமை என்பவைகள் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

உண்மையான சோஷலிஸம் பரந்த அளவிலான அரசியல் சுதந்திரங்களையும் வழங்குகிறது. சோ.சோ.கு.ஒ.வின் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று சோவியத் ராஜ்யத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்புக்களினது உருவாக்கமும், செயற்பாடுகளும் ராஜ்ய விவகாரங்களை நடாத்துவதில் ஒவ்வொரு பிரஜைக்கும் அதியுயர் சாதகமான சூழ்நிலையை உருவாக்குகின்றன. ''ஒவ்வொரு பிரஜையும் ராஜ்ய விதிகளை விவாதிப்பதிலும், தனது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதிலும், ராஜ்விதிகளை அமுல்படுத்துவதிலும் பங்குகொள்வதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும்,'' என்று சோஷலிஸத்தின் கீழ் மக்களின் பரந்த பிரதிநிதித்துவம் பற்றி லெனின் குறிப்பிட்டுள்ளார்.

சமூக, குடியியற் செயற்பாடு, பொது நோக்கின் அபிவிருத்தி, ராஜ்ய—சமூக விவகாரங்களில் பங்குகொள்ளல் என்பவை மனிதனுடைய சுதந்திரத்தை மேலுயர்த்தும் பிரதான தோற்றப்பாடுகளாக உள்ளன. சோவியத் சமுதாயத்தில் ஜனநாயகத்தை மேலும் விருத்திசெய்வதில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான பாத்திரம் சமூக, அரசியற் துறைகளில் சுதந்திரத்தின் கொள்கைகளினது வெற்றியைத் தீர்மானிக்கும் காரணியாக உள்ளது.

2. வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பாகம். 27, பக் 212

# மாபெரும் சொத்து

தனித்துவத்தின் உண்மையான சுய வெளிப்பாடாக தனிமனித சுதந்திரம் இருப்பதனை நாம் காண்கின்றோம்; தனிமனித சுதந்திரம் மனிதனின் மாபெரும் சொத்தாக இருக்கிறது. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோர் சுட்டிக்காட்டியதைப்போன்று ஒவ்வொரு மனிதனும் சுய நிறைவு பெறுவதை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறான், சோஷலிஸத்தின் கீழேயே இதற்கான நடைமுறைச் சாத்தியத்திற்கேற்ற தளம் உள்ளது.

தனிமனிதனதும். சமுதாயத்தினதும் வாழ்க்கையின் ஐக்கியமே சோஷலிஸத்தின் கீழ் தனிமனித சுதநதிரத்தின் பிரச்னையாக உள்ளது. தனிமனித சுதந்திரத்தை சமூக ஒழுங்குடனும், தனிமனித உரிமைகளை குடியியற் கடமைகளுடனும் ஒன்றுபடுத்தவேண்டிய தேவை இங்கே எழுகிறது.

ஃ ஃ

தனிமனித சுதந்திரத்தை விஸ்த்தரித்துச் செல்லும்போது சோவியத் சமுதாயம் தனிமனிதனின் முன்னால் மாபெரும் பொறுப்புக்களையும் முன்வைக்கிறது. பொது இலக்குகளை நோக்கி வேலைசெய்யவேண்டிய மிக நியாயமான அவசியப்பாடுகள் அவன் எதிர்நோக்குகிறான். தனிமனிதனுடைய உணர்வுகளும் அவனுடைய பொறுப்புணர்ச்சிகளும் அவனுடைய சொந்தச் செயற்பாடுகளினாலோ அல்லது அவற்றின் உடனடி விளைவுகளினாலோ மட்டுப்படுத்தப்படவில்லை; மனிதகுலத்தின் தலைவிதிக்காகவும், வரலாற்றுப்போக்கிற்காகவும், எமது சகாப்தத்திற்காகவும் தனது பொறுப்புணர்ச்சியை அவன் விருத்தி செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றான். தமது சமூகக் கடமைகளை ஆற்றுவதற்கான மாற்றங்களைத் தெரிவு செய்யும் சுதந்திரம் இயல்பாகவே சோவியத் மக்களுக்கு இருக்கிறது. ஆனால் நாட்டிற்கோ, மனிதகுலத்திற்கோ, முற்போக்கான சமுதாயமொன்றை நிர்மாணிப்பதற்கோ ஒவ்வொருவருக்கும் உரிய கடமைகளையும், பொறுப்புக்களையும் எவருமே உதறித்தள்ளிவிடமுடியாது.

கொம்யூனிஸ்ட் எஸ்ரோனி

**வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள்**

அர்காடி கௌஃப்மன்
விஞ்ஞான கலாநிதி

# தேசிய விமோசனப் புரட்சிகள்-இன்று

கடந்த ஐந்து ஆண்டுகளில் சமாதான முற்போக்குச் சக்திகளும் தேசிய விமோசன இயக்கமும் புதிய பெரிய வெற்றிகளை ஈட்டியுள்ளன. இக்காலப் பகுதியில் விடுதலையுற்ற நாடுகளில் பிரமாண்டமான அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் நடந்துள்ளன. இவை சமூக வளர்ச்சி நியதிகளின், பாற்பட்டவை மட்டுமல்ல: இவை மார்க்ஸிஸ—லெனினிய தத்துவத்துடனும் நடைமுறையுடனும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினது 26வது காங்கிரசின் சமாதான வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதில் ஈட்டப்படும் லெற்றியுடனும் இணைந்துள்ளன.

## வர்க்க அணி அமைவு

நாடுகளின் சுதந்திரத்தை ஈட்டிக்கொடுத்துள்ள தேசிய—விமோசனப் புரட்சி வளர்ச்சியின் அடுத்த கட்டத்தினுள் பிரவேசித்துள்ளது. தொழில்நுட்ப, பொருளாதார சமூக, கலாசார பின்தங்கலை தாண்டுவதன் மூலம் உண்மையான அரசியல் சுதந்திரத்தை ஈட்டுவதே இந்தக் கட்டத்தின் பணியாகும்.

இந்நிலைமைகளில் இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண பல்வேறு வர்க்கங்களும் அரசியல் ஸ்தாபனங்களும் தத்தமது திட்டங்களை முன்வைக்கின்றன. வர்க்க சக்திகளின் அணி அமைவு நிகழ்கிறது.

விடுதலையுற்ற சில நாடுகளில் ஆட்சி நடத்தும் பூர்ஷுவா அரசாங்கங்களாலும் நவீன நிலைமைகளில் ராஜ்யத்தை நடத்திச் செல்வது மிகமிக கஷ்டமானதாக இருக்கிறது. இவை பயன்படுத்தும் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்கான முறைகள் காலாவதியானவையாகவும் உள்ளன. சமூக வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் அடிப்

படையான மாற்றங்களைக் கோரி நிற்கும் பிரச்னைகளை தேசிய பூர்ஷுவாக்கள் மத்தியில்பல்வேறு அரசியல் போக்குகளும், வேறுபாடுகளும் தலைதூக்குகின்றன. மாற்றுவழி தேடும் முயற்சியில் சில நாடுகளில் மக்கள் சக்தியை அங்கீகரித்து மக்களின் நலன்களுக்கான சில சீர்திருத்தங்களை பூர்ஷுவாக்கள் மேற்கொள்கிறார்கள்.

விடுதலையுற்ற நாடுகளில் தொழிலாளி வர்க்க அணிகளும், பாத்திரமும் கடந்த ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. குறிப்பாக அரசாங்கத்துறையில் தேசிய தொழில்கள் வளர்ந்துள்ளமை இதற்கான காரணமாகும். வர்க்கப் போராட்டம் முன்னேறுவதுடன் தொழிலாளர்களின் வர்க்க போதமும் அவர்களது ஸ்தாபன மட்டமும் உயர்கிறது. விடுதலையுற்ற நாடுகளிலெல்லாம் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் திரண்டுள்ளனர். இந்நாடுகளில் தொழிலாளர்களின் அரசியல் பக்குவம் துரிதப்படுவதுடன் வெகுஜன இயக்கத்தில் இவர்களின் பாத்திரமும் அதிகரித்து வருகிறது.

உலக சோஷலிஸ அமைப்பு வாழ்க்கை எதார்த்தமாகியுள்ள இன்று தொழிலாளி வர்க்கம் பலவீனமாக உள்ள நாடுகளின் மக்கள் சர்வதேச தொழிலாளி வர்க்கத்தினதும் உலக கம்யூனிஸ இயக்கத்தினதும் செல்வாக்கை உணர்வதுடன், விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களைக் கற்றுக் கொள்வதற்கான மெய்யான வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். தேசிய பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் மார்க்ஸிய-லெனினிய முன்னணிப்படையினதும் அரசியல் சாத்தியப்பாடுகளும், அதன் செல்வாக்கும் நிர்ணயமான ஸ்தாபன, சித்தாந்தப் பாத்திரத்தை வகிக்கின்றன.

வளர்முக நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் சமுதாயத்தின் ஏனைய பகுதியினர் மத்தியிலும் மார்க்ஸிய—லெனினிய கருத்துக்களின் செல்வாக்கு அதிகரித்து வருவதற்கு இந்நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஸ்தாபிதமாவதும், வலுப்பட்டு வருவதும் சான்று பகர்கின்றன. தேசிய விமோசன இயக்கத்தினதும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினதும் மத்தியில் உதித்த ஆசிய—ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகள் நீண்ட பாதையைக் கடந்து வந்துள்ளன.

தேசிய விமோசன இயக்கம் வளர்ச்சியடைவதோடு கம்யூனிஸ்ட் கட்சிகளின் எண்ணிக்கையும், அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இன்று ஆசிய நாடுகளில் 25 கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன, ஆபிரிக்காவில் 10 கூடுதல் கூடுதலான தொழிலாளர்களும் விவசாயிகளும், அறிவாளிகளும், மாணவர்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளில் சேர்ந்து வருகிறார்கள்.



விடுதலையடைந்த நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் நிலபிரபுத்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்தும் அடிப்படை சமூக—பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்காகவும், உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் போராடுகின்றன- வேறுவார்த்தையில் தேசிய விமோசனப் புரட்சியை விரைவுபடுத்தவும், சோஷலிஸத்திற்கான பாதையைத் திறந்துவைக்கவும் அவை பெரும் பணியாற்றுகின்றன.

## புரட்சிகர ஜனநாயகம்

புரட்சிகர ஜனநாயகம் வளர்ச்சியுறும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் புதியதொரு சமூக—பொருளாதார-அரசியல் தோற்றப்பாடாகும். இன்று இது பல நாடுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது.

மனுக்குலத்தின் வளர்ச்சியில் உலக சோஷலிஸம் நிர்ணயமான சக்தியாகமாறியுள்ள இன்று, மார்க்ஸிஸ-லெனினிய சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஆதரிக்கும் புரட்சிகர—ஜனநாயகக் கட்சிகளால் ஆரம்பக் கட்டத்தில் சமூக முன்னேற்றத்திற்குத் தலைமை வகிக்க முடியும். என்பதை இந்நாடுகளின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. புரட்சிகர நிகழ்வுப் போக்கில் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளால் தொழிலாளி வர்க்கக் கட்சிகளாக முடியும் இது நீண்டகால நிகழ்வு, ஆனால் எதிர்காலத்தின் அம்சம் இதுவே.

சில பின்போதல்கள் இருந்த போதிலும் தேசிய—விமோசனப் புரட்சிகள் படிப்படியாக தேசிய ஜனநாயகப் புரட்சிகளாக முன்னேறிவருகின்றன. தேசிய விமோசனப் போராட்டத்தில் உதித்த சோஷலிஸத் திசையமைவு பல கஷ்டங்களுக்கும், சில சமயங்களில் தோல்விகளுக்கு மத்தியிலும் கூட முன்னேறி வருகிறது.

இந்த மிக முக்கியமான நிகழ்வுப் போக்கு வளர்ந்து செல்லும்போது சோஷலிஸத் திசையமைவு நாடுகளிலுள்ள புரட்சிகர ஜனநாயகவாதிகள் மார்க்ஸிஸ—லெனினிய கருத்து நிலைகளை மேற்கொள்வது முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் விஞ்ஞான சோஷலிஸத்தால் வழிநடத்தப்படுவர்களால்தான் தேசிய—ஜனநாயகப் புரட்சியை சோஷலிஸப் புரட்சியாக வளர்த்தெடுக்க முடியும், வளர்முக நாடுகளில் சோஷலிஸ மாற்றத்திற்கான வேறு வடிவங்களை தோன்றமுடியாது என்று இதால் அர்த்தமாகாது. முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்திற் கூடாகச் செல்லாது சோஷலிஸத்திற்கு விடுதலையுற்ற மக்கள் செல்லமுடியும் என்ற லெனினின் முடிவை வரலாறு ஊர்ஜிதம் செய்துள்ளது.

முதலாளித்துவம் அதன் அனைத்து வடிவங்களிலும் அழிவுக்கு முகம்கொடுக்கும் சோஷலிஸ்த் திசையமைவைக் கொண்ட நாடுகளுக்கு எதிராக உள்நாட்டுப்பிற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து ஏகாதிபத்தியம் தீவிர சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளது.

எனினும் இந்நாடுகளில் மேற்கொள்ளப்படும் அடிப்படை மாற்றங்கள் சோஷலிஸத்திற்கு மாறிச்செல்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும்கூட சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இடம்பெறும் வர்க்கப்போராட்டத்தின் பெறுபேற்றையே இது பொறுத்துள்ளது.

ஆசிய—ஆபிரிக்க நாடுகளில் சோஷலிஸத்தின் எதிர்காலம் தேசிய—ஜனநாயகப் புரட்சியின் கடமைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யுப்படுவதில்—சோஷலிஸத் திசையமைவின் முதலாளித்துவமற்ற வளர்ச்சிக் கட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்படுவதில் தங்கியுள்ளது. சுதந்திரமடைந்த பெருவாரி நாடுகளில் நேரடியாகவே சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்கான லௌகீக—அரசியல் நிலைமைகள் இல்லாததால் இந்த வரலாற்றுக் கட்டம் தவிர்க்கப்படமுடியாததாகிறது.

## சோவியத் உதவி

இந்தச் சிக்கலான நிலைமைகளில் உலக சமாதானத்தையும், சுதந்திரமடைந்த நாடுகளின் முன்னேற்றத்தையும் உத்தரவாதப் படுத்தும் சக்தியாக சோவியத் யூனியனினதும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றன. சோஷலிஸத்தினதும் தேசிய விமோசன இயக்கத்தினதும் ஒருமைப்பாடு எனும் லெனினிய கோட்பாட்டுக்கு விசுவாசமாக இருக்கும் சோஷலிஸ சமாஜம் தேசிய—சமூக விமோசனத்திற்காகப் போராடும் மக்களின் நம்பகமான நண்பனாகும்.

விடுதலையுற்ற நாடுகளுக்கு உலக சோஷலிஸம் அரசியல் ஆதரவை வழங்குகிறது. தேசிய விமோசனத்தின் மீதான ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களை சோவியத் யூனியன் பல தடவைகளில் தடுத்து நிறுத்தியுள்ளது. சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் வளர்முக நாடுகளுக்கு பாரிய பொருளாதார—தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றன. சமத்துவ அடிப்படையில் உலகப் பொருளாதார உறவை உருவாக்குவதற்கான இத்நாடுகளின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கின்றன. இன்று சோஷலிஸ சமாஜத்திற்கும் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கிமிடையிலான ஐக்கியம் விசேஷ அரசியல், பொருளாதார. சித்தாந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

—ரூபோசி கிளாஸ் இ ஸொவ்ரெமனிமிர், இதழ் 3, 1981



# வளர்முக நாடுகளில் தேசிய ஜனநாயக முன்னணிகள்

வளர்முக நாடுகளின் முன்னுல் இன்றுள்ள மிகப் பாரிய பிரச்னை ஏகாதிபத்தியத்தையும் உள்நாட்டுப் பிற்போக்கையும் எதிர்த்து பரந்தளவிலான தேசிய ஜனநாயக முன்னணிகளை உருவாக்குவதும் வலுப்படுத்வதுமாகும்.

ஏகாதிபத்திய விரோத ஐக்கிய முன்னணியை (இடதுசாரி திசையமைவைக் கொண்ட அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளின் ஐக்கிய முன்னணி) அமைக்கும் பிரச்னையை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூலோபாயத்தையும் நடைமுறை உபாயத்தையும் தனது எழுத்துக்களில் வகுத்தளித்த போது லெனின் எழுப்பினுர். இந்த வர்க்க அணிகளின் மூலாதார முக்கியத்துவம் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் நடவடிக்கைகள் முழுமையாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன. தேசிய ஜனநாயக முன்னணிகளின் நடவடிக்கைகள் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பாரிய அனுபவத்தை உள்ளடக்கியுள்ளன. இது கம்யூனிஸ் கட்சிகளின் தஸ்தாவேஜுகளில் பொதுமைப்படுத்தியும் தொகுத்தும் கூறப்பட்டுள்ளன.

## முன்னணியின் சாரம்

சோஷலிஸத் திசையமைவைக் கொண்ட ஆசிய—ஆபிரிக்க நாடுகளில் தேசிய—ஜனநாயக முன்னணிகளின் தோற்றம் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளில் புதியதோர் அரசியல் தோற்றப்பாடாகும். இது தேசியவிமோசன இயக்கத்தின் புதிய கட்டத்தைக் குறிக்கிறது. வெகுஜன மக்களை ஒன்றுபடுத்துவதும், அனைத்து முற்போக்கு சக்திகளினதும் ஒத்துழைப்பை அணிதிரட்டுவதுமே இந்த முன்னணிகளின் நோக்கமாகும். இத்தகைய அணிகள் இருப்பது புரட்சிகர நிகழ்வுப் போக்கினை ஆழப்படுத்துவதுடன் தேசிய விமோசன மண்டலத்தில் சமூக—அரசியல் ஜனநாயகப்படுத்தலை முன்னெடுத்துச் செல்கிறது.

இந்த ஐக்கிய முன்னணிகளின் அடித்தளமாக உள்ள புரட்சிகர ஜனநாயக கட்சிகள் தொழிலாளர் கட்சிகளாக புனர் அமைக்கப்படும் நாடுகளில் (அங்கோலா, பெனின், கொங்கோ, மொஸாம்பிக், எதியோப்பியா) ஏகாதிபத்திய முன்னணிகள் தொடர்ந்து வலுப்பட்டு வருகின்றன, விவசாயி

களை நேச சக்தியாகக் கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம் வலுப்பட்டுவருகிறது. இந்நாடுகள் சமூக—பொருளாதார, அரசியல் வளர்ச்சியைத் துரிதப்படுத்திவருகின்றன. முன்னணியினது நடவடிக்கைகள் அதன் முன்னணிக் கட்சிகளினது கருத்துக்களிலான மாற்றத்தை ஆழப்படுத்துகின்றன. எமது காலத்தின் இந்த மாற்றம் மார்க்ஸிய—லெனினிய கருத்துக்களை இவை மேற்கொண்டுவருவதாகும். இதனால் இவை மார்க்ஸிய—லெனினிய கட்சிகளாகிவிட்டன என்று அர்த்தமாகாது எனினும் தேசிய ஜனநாயக முன்னணிகளை இவை வழிநடத்திச் செல்லும்போது விஞ்ஞான கம்யூனிஸத்தின் சித்தாந்தை நோக்கி இவை முன்செல்கின்றன.

புரட்சிகர—ஜனநாயகக்கட்சிகளும் கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ கட்சிகளும் உள்ள நாடுகளில் உருவாக்கப்படும் இம்முன்னணிகள் இக் கட்சிகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வழிவிடுகின்றது உதாரணத்திற்கு புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளினதும் கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் வேலைத் திட்டங்களும் சித்தாந்த நிலைபாடுகளும் நெருங்கி வருவதால் சமுதாயத்திலுள்ள அனைத்து முற்போக்குச் சக்திகளினதும் பரந்த ஐக்கியத்தை உருவாக்குவது சாத்தியமாகிறது. கட்சி களுக்கிடையிலான உறவுகள் அபிவிருத்தியுறுவதால் தேசியப் புனருத்தாரணத்தில் இக் கட்சிகளினது உறுப்பினர்கள் முனைப்பான பங்காளிகளாகி வருகிறார்கள். பொது இலட்சியங்களைச் சாதிப்பதில் ஆளும் கட்சிகளுடன் ஒன்றுபட்டுஉழைக்கும் முன்னணிகள் புதிய அரசியல் கட்சிகளுக்கு உதவியுள்ளது.

பிற்போக்கான சமூக உறவுகளின் பகைப்புலத்திலேயே தேசிய ஜனநாயக முன்னணிகள் தோற்றம் பெறுகின்றன. இதனால் தனிவர்கங்களுக்குள்ளும் சமூகப் பிரிவுகளுக்குள்ளும், முன்னணிக்குத் தலைமை தாங்கும் சக்திகளுக்குள்ளும் பிற்போக்கான சித்தாந்தங்கள் தலைதூக்க ஏதுவாகிறது. சில புரட்சிகர ஜனநாயகவாதிகள் புரட்சியினது சமூக வளர்ச்சியின் ஏதாவது ஒரு கட்டத்தின் அல்லது அம்சத்தின் முக்கியத்துவதை அதீதமாக வலியுறுத்துகிறார்கள். சில புரட்சிகர ஜனநாயகவாதிகள் மார்க்ஸிஸ—லெனினிய சித்தாந்தத்திற்கு அந்நியமான 'சுய' தத்துவங்களை முன்வைக்க முனைவது தேசிய ஜனநாயக முன்னணியைப் பலவீனப்படுத்துகிறது. புரட்சிகர ஜனநாயக வேலைத்திட்டபூர்வமான கோட்பாடுகள் இல்லாதிருப்பதும் மக்களை ஒன்று திரட்டுவதை சாத்தியமற்றதாக்குகிறது.

குட்டி பூர்ஷ்வா சகிப்பின்மை, அதிசூரத்தனம். இடதுசாரி—ஸெக்டேரியனிஸம் முதலானவை தேசிய ஜனநாயக முன்னணிகளுக்கு பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்துகின்றன. முன்னணிகள் ஸ்தாபிக்கப்படுவதற்கும் செயற்படுவதற்கும் பெரும் முட்டுக் கட்டையாக சில ஆளும் கட்சி



களின் கம்யூனிஸ விரோதம் உள்ளது. இவை கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் ஒத்துழைப்பை மேற்கொள்ள மறுக்கின்றன. தீவிர பிற்போக்குச் சக்திகள் முன்னணியில் அங்கம் வசிக்கும் வெவ்வேறு இனப் பகுதிகளுக்கிடையில் குரோதத்திற்குத் தூபமிடுவதன் மூலமும், மக்களை அரசாங்க விரோத நடவடிக்கைகளுக்குத் தூண்டிவிடுவதன் மூலமும் தேசிய ஜனநாயக முன்னணிகளைச் சீர்குலைக்க இடையறாது முயற்சிக்கின்றன.

## நான்கு வகைகள்

மார்க்ஸிஸ—லெனினிய தத்துவார்த்த நிலைபாட்டிலிருந்து பார்க்கும்போது, சோஷலிஸ திசையமைவை மேற்கொண்டுள்ள நாடுகள் உட்பட வளர்ச்சியுறும் நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஐக்கிய முன்னணிகளின் பிரத்தியேக அம்சங்களும் தனித்துவத் தன்மைகளும் இவற்றின் சமூக அடித்தளத்திலிருந்து எழுபவையாகும், இவற்றில் கம்யூனிஸ்ட்கள் வகிக்கும் இடத்தினைப் பொறுத்து ஐக்கிய முன்னணிகளில் நான்கு வகையாறுக்களை சோவியத் அறிஞரான பேராசிரியர் ரொஸ்டிஸ்லாவ் உலியானோவ்ஸ்கி இனம் கண்டு காட்டியுள்ளார்.

முதலாவது வகை: ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து சுதந்திரத்திற்காக முனைப்பாகப் போராடும் தேசிய பூர்ஷ்வாக்களை அல்லது அதன் மிகவும் றடிக்கல் வட்டாரங்களைக் கொண்ட முன்னணி. இந்த நிலைமைகளில் தமது செல்வாக்கை விரிவுபடுத்துவதிலும், தமது முற்போக்கான உள்ளார்ந்த சாத்தியப்பாட்டை இந்த வட்டாரங்களை உணரவைக்கக் கூடிய ஒரு ஐக்கிய முன்னணிக் கொள்கையை கடைப்பிடிப்பதிலும் கம்யூனிஸ்ட்டுகள் அக்கறை கொண்டுள்ளனர். இத்த வகை ஐக்கிய முன்னணி இந்தியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், இலங்கை முதலிய நாடுகளில் பல்வேறு வடிவங்களில் வெளிப்பாடு பெற்றன.

மற்ற மூன்று வகைகளையும் பெருவாரி ஆபிரிக்க, அராப் நாடுகளில் காணலாம். இங்கு சமூக மாற்றத்தின் நிகழ்வுப்போக்கு தேசிய பூர்ஷ்வாக்களின் வர்க்க நலன்களுடன் மோதுவதில் பிரவேசித்துள்ளது. இந்த நாடுகளில் அதிகாரத்திலுள்ள புரட்சிகர ஜனநாயகவாதிகள் பூர்ஷ்வாக்களின், குறிப்பாக அதிகாரத்துரைத்தன, கம்பிராடோ பூர்ஷ்வாக்களின் பிரதிநிதிகள் ஐக்கிய முன்னணியில் சேர்வதை தடுத்து வருகிறார்கள். எனினும் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த, திட்டமிட்ட தேசியப் பொருளாதார வளர்ச்சியை விரும்புகிற பூர்ஷ்வாக்களின் பிரிவினர்க்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

இந்நாடுகளில் முதலாளித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் முற்று முழுதாக புரட்சிகர ஜனநாயகவாதிகளால் வழிநடத்தப்படுகிறது (இரண்டாவது வகை); அல்லது தேசிய விமோசன இயக்கம் கம்யூனிஸ்ட்டுகளால் வழிநடத்தப்படுகிறது—(மூன்றாவது வகை); அல்லது ஐக்கிய முன்னணியில் புரட்சிகர—ஜனநாயகவாதிகளும் கம்யூனிஸ்ட்டுகள் பிரதான சக்தியாக இருக்கிறார்கள் (நான்காவது வகை) இந்த மூன்று வகைகளுக்குமிடையிலான தேர்வு புரட்சிகர ஜனநாயக ஆட்சிகளின் குணாம்சத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது.

அரசியல் கட்டமைப்பைப் பொறுத்து புரட்சிகர ஜனநாயகவாதிகளால் அமைக்கப்படும் ஆட்சிகளை, இரு வகைகளாக பிரிக்கலாம். ஒன்று:- பல கட்சி ஆட்சிகள் இரண்டு:- ஒரு கட்சி ஆட்சி.

முதல் வகை நாடுகளுக்கு உதாரணமாக சிரியாவை சொல்லலாம். இந்த நாடுகளில் ஐக்கிய முன்னணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆளும் கட்சிகளுடன் கம்யூனிஸ்ட்டுகளும், மற்றும் தேசபக்த சக்திகளின் பிரதிகளும் முன்னணியில் அங்கம் வகிக்கிறார்கள். இந்நாடுகள் சோஸலிஸத்தை நோக்கி முன்செல்ல உதவும் பொது நோக்கத்துடன் இவர்கள் ஆளும் புரட்சிகர—ஜனநாயகக் கட்சிகளை ஆதரிக்கிறார்கள். இந்த ஐக்கிய முன்னணிகள். முற்போக்கு—தேசபக்த சக்திகளின் அரசியல் அணிகளாகும் இவற்றின் அடிப்படை தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் உழைக்கும் மக்களாவர். இவ் ஐக்கிய முன்னணியில் ஒரு பகுதியாக இருக்கும் கம்யூனிஸ்ட்டுகள் ஆளும் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை அங்கீகரித்து அதனுடன் ஒத்துழைக்கிறார்கள்.

இரண்டாம் வகை ஆட்சிகளைக் கொண்ட நாடுகள் உஷ்ணவலய ஆபிரிக்காவில் உள்ளன. இவை கம்யூனிஸ்ட் கட்சிகள் இல்லாத அல்லது இவை கணிசமான செல்வாக்கினைக் கூட வகிக்காத சோஷலிஸத்திசையமைவைக் கொண்ட நாடுகளையும் உள்ளடக்கியுள்ளன. இந்நாடுகள் சமூக—அரசியல் அணியின் பிறிதொரு வடிவத்தைப் பிரதிபலிக்கின்றன. இந்நாடுகளின் ஒருகட்சி ஆட்சி பரந்துபட்ட மக்களின் ஒற்றுமையைக் குறிப்பதுடன், அத்தகைய ஐக்கியத்தை வலுப்படுத்தும் சாதனமாகவும் உள்ளது.

இவை அனைத்தும் எவ்வளவுதான் வேறுபட்டிருந்தபோதிலும் ஒரு பொது ஒருமைப்பாடு நிலவுகிறது; ஏகாதிபத்திய விரோத சக்திகள் அடிப்படை சமூக—பொருளாதார மாற்றத்திற்காக நிற்கின்றன.



# புரட்சிகர அனுபவம்

அங்கோலா, மொஸாம்பிக் தேசிய ஜனநாயகக் கட்சிகளின் அனுபவங்களும் தனித் தன்மைகளும் விசேஷ முக்கியத்துவமுள்ளவையாகும். இந் நாடுகளில் தேசபக்த முற்போக்குச் சக்திகளை ஐக்கியப்படுத்தும் நிகழ்வும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் முன்னணிப் பாத்திரம் வலுப்படுவதும் ஏககாலத்தில் நடைபெறுகின்றன. அங்கோலாவினதும் மொஸாம்பிக்கினதும் புரட்சிகர ஜனநாயகத் தலைவர்கள் புரட்சிகர ஆதாயங்களைப் பாதுகாப்பதிலும், ஐக்கிய முன்னணிகளின் கட்டுக் கோப்புக்குள் சமூக மாற்றங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதில் மக்களின் ஆற்றலை ஆற்றுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறார்கள். இங்கு தேசிய—ஜனநாயக முன்னணிகளை ஸ்தாபிப்பதில் ஈட்டப்பட்ட வெற்றிக்கு இந்த புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் சமூகக் கட்டமைப்பே காரணமாகும்.

அங்கோலாவில் உழைக்கும் மக்களின் முன்னணிப் படையான எம். பி. எல். ஏ. பரந்த கலோனியல் எதிர்ப்பு இயக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களுள் மிகப் பெரும் பான்மையானவர்கள் விவசாயிகளும் நகர்ப்புற தொழிலாளர்களும் புரட்சிகர அறிவாளிகளும் ஆவர்.

மொஸாம்பிக்கில் மொஸாம்பிக் விமோசன முன்னணி (ஃபிரலிமோ) உழைக்கும் மக்களின் முன்னணிக் கட்சியாக மாற்றப்படுகிறது. இதன் உறுப்பினர்களுள் பெரும்பான்மையானவர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், போர்வீரர்கள், புரட்சிகர அறிவாளிகள் ஆவர். கட்சி மொஸாம்பிக் நாட்டினதும் சமுதாயத்தினதும் தலைமைச் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. ஃபிரலிமோ மார்க்ஸிய—லெனினியத்தின் பொதுக் கோட்பாடுகளை தேசிய நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு கடைப் பிடிப்போம் என்று மொஸாம்பிக்கின் ஜனாதிபதி ஸமோரா மைக்கேல் கூறினார்.

கொங்கோவில் ஐக்கிய முன்னணி முன்னணிக் கட்சியின் வழிநடத்துதலின் கீழ் உருவாக்கப்படுகிறது. மத நிறுவனங்கள் உட்பட வெகுஜன ஸ்தாபனங்கள் இதில் இணைக்கப்படுகின்றன.

எதியோப்பியாவில் தேசிய ஜனநாயக முன்னணி ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு அடிப்படையில் உருவாக்கப்படுகிறது.

தேசிய ஜனநாயகப் புரட்சி முன்னேறிச் செல்கையில் சோஷலிஸத்திற்கான மாற்றத்தை மேற்கொள்வதற்கான

வழி பரந்த வெகுஜனங்களை ஒன்று திரட்டுவதும், வழி நடத்துவதுமாகும் என்று புரட்சிகர ஜனநாயகவாதிகள் கருதுகிறார்கள். இந்த நோக்கத்துடன் எதியோப்பிய தொழிலாளர் கட்சியை ஸ்தாபிப்பதற்கான ஒரு கமிஷன் 1979 டிசம்பரில் நிறுவப்பட்டது. ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும், அதிகாரவர்க்க முதலாளித்துவத்தையும் எதிர்த்த பொது வேலைத்திட்டமே ஐக்கியப்படுத்தும் காரணியாக இருக்கும் என எதியோப்பிய புரட்சிக்காரர்கள் கருதுகிறார்கள்.

அல்ஜீரிய தேசிய விமோசன முன்னணியின் (எவ். எல். என்) ஸ்தாபன அமைப்பு தேசிய ஜனநாயக முன்னணியை உருவாக்க அடி நிலை முன்முயற்சியை கோரி நிற்கிறது. அல்ஜீரிய கம்யூனிஸ்ட்டுகளின் கருத்துப்படி எஃப் எல் என். அத்தகைய முன்னணியாக இல்லாவிட்டாலும் கூட அது அத்தகையதொரு முன்னணியாகவே அல்லது முன்னணிக் கட்சியாகவோ மாறலாம்.

நாடு எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்னைகள் குறித்து உழைக்கும் மக்களுடன் கருத்துப் பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கான புரட்சிகர ஜனநாயகவாதிகளின் முன்முயற்சிகளை அல்ஜீரிய கம்யூனிஸ்ட்டுகள் ஆதரிக்கிறார்கள். தேசிய நலன்களுக்காகப் பாடுபடும் அனைத்து மக்களுக்கும் தேசிய ஜனநாயக முன்னணியின் அங்கத்துவம் வழங்கப்படவேண்டும் என கம்யூனிஸ்ட்டுகள் கருதுகிறார்கள்.

ஃ ஃ

புரட்சியின் இன்றைய கட்டத்தில் சோஷலிஸத் திசையமைவை தலைமை வகித்துச் செல்லும் சக்தி தேசிய ஜனநாயக முன்னணியே தேசிய-அரசியல்-சமூகப் பிரச்னை தீர்வுகாணக்கக்குத் கூடியதும் இதுவே.

வளர்முக நாடுகளினது அனைத்து சமூக மட்டங்களினதும் நலன்களை இந்த முன்னணிகள் பிரதிபலிக்கின்றன. இவை உருவாக்கப்படுவது விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும், குட்டி பூர்ஷ்வாக்களினதும், றடிக்கல் அறிவாளிகளினதும், தேசிய பூர்ஷ்வாக்களின் தேசபக்த பகுதிகளினதும் நலன்களை பிரதிபலிக்கிறது. வர்க்க வித்தியாசங்கள் இருந்த போதிலும் இந்த முன்னணிகளில் இணையும் சக்திகள் பொது நலன்களினாலும் பொதுவேலைத் திட்டத்தாலும் ஒன்றிணைக்கப் படுகின்றன

யூரி ஒஸ்ரேவிற்றியானோவ்
விஞ். கலாநிதி (பொருளியல்)

# ஏகாதிபத்தியமே பின்தங்கலுக்கான முழுப்பொறுப்பாளி

கடுமையான போராட்டங்களின் மூலம் வளர்முக நாடுகள் தமது அரசியற் சுதந்திரத்தை வென்றெடுத்துள்ள போதிலும் அவை இன்னும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வருகின்றன. அவற்றின் சமூக—பொருளாதாரப் பின்னடைவுகள் மேலும் அதிகரித்து வருகின்றன.

## பொருளாதார இடைவெளி பெருத்துவருகிறது

வளர்முக நாடுகளில் இடம்பெறும் ஒவ்வொரு பாரிய நிகழ்வும் அந்நாடுகளின் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. சதி முயற்சிகள், பிரதான சமூகச் சக்திகளுக்கிடையிலான மோதல்கள் அல்லது பிரதேசரீதியான யுத்தங்கள் என்பன உலக அரசியற்போக்கில் குழப்பநிலைகளைத் தோற்றுவிக்கின்றன. தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் இளம் தேசிய ராஜ்யங்கள் பிரதான சக்திகளாக இருக்கின்றன, இவற்றின் ஆதரவு இல்லாமல் ஐ.நா.வில் எந்தவொரு முக்கிய தீர்மானத்தையும் நிறைவேற்றமுடியாது.

இதே நேரத்தில் இந்நாடுகளின் அரசியற் பாத்திரங்கள் அவற்றின் பொருளாதாரப் பின்னடைவுகளுடன் பெரிதும் முரண்படுகின்றன. அபரிமிதமான மக்கட் பெருக்கம் இந்நாடுகளின் கைத்தொழில், விவசாய அபிவிருத்தியைப் பெரிதும் பாதிக்கின்றது. 1950ற்கும் 1976ற்கும் இடையில் இந்நாடுகளின் ஜனத்தொகை 1060 மில்லியனிலிருந்து 1944.5 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2000ஆவது ஆண்டில் உலக மொத்த ஜனத்தொகையில் எண்பது சதவிகிதம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க நாடுகளிலேயே இருக்குமென மக்கட் தொகையியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்தப் பின்னணியில் புதிதாக விடுதலையடைந்த நாடுகளுக்கும் கைத்தொழில்மயமாக்கப்பட்ட முதலாளித்துவ நாடுகளுக்குமிடையேயுள்ள பொருளாதார இடைவெளி ஆபத்தான அளவிற்கு விரிவடைந்து வருகிறது. உலக ஜனத்தொகையில் மூன்றில் இரண்டுபங்கினர் வசிக்கும் நிலப்பரப்பில் உலக கைத்தொழில் உற்பத்தியில் ஏழுசத வீதம் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

## விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம்

உலகில் பரவலாக இடம்பெற்றுவரும் தொழில்நுட்பப் புரட்சி புவியின் மிகப்பின்தங்கிய மூலைகளுக்குக்கூட ஊடுருவிச் சென்றுள்ளது.

பல வளர்முக நாடுகளில் விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் வீச்சு மிகக்குறைவாகவும், மந்தமாகவும் இருக்கின்றது. இதற்குச் சில விதிவிலக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன. உள்நாட்டுச் சூழ்நிலைகளுக்கேற்ப இப்புரட்சியை சுவீகரித்துக் கொள்ளும் திறனின்மை ஒருபுறமிருக்க இன்னொரு எதிர்மறைக் காரணியும் வெளிப்படையாக உள்ளது. வளர்முக நாடுகளின் ஏழ்மைநிலையும், நிதிவளப்பற்றாக்குறையுமே இந்த எதிர்மறைக் காரணியாகும். முதலாளித்துவ நாடுகளுக்கும் அவற்றின் முன்னைய குடியேற்ற நாடுகளுக்குமிடையில் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சி, அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் இடைவெளி 55க்கு 1 என்ற விகிதத்தில் உள்ளது. வளர்முக நாடுகள் மீது திணிக்கப்பட்ட மேற்கத்திய விஞ்ஞான, தொழில்நுட்ப வடிவங்களே இந்தச் சேதத்தினை ஏற்படுத்தின. சர்வதேசத் தொழிற் சம்மேளனத்தினால் எழுபதுக்களின் நடுப்பகுதியில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரப்படி வளர்முக நாடுகளில் ஏறக்குறைய 300 மில்லியன் மக்கள் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள்.

## புதியதோர் அடிப்படையில் பழைய சுரண்டல்

புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் தோற்றப்பாடுகளை அவற்றின் பழைய வடிவங்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள் பற்றிய உண்மைகளைக் கணக்கிற்கொள்ளாமல் புரிந்து கொள்ளமுடியாது. இங்குதான் முதலாளித்துவத்தின் ஒழுங்கற்ற அபிவிருத்தியின் விதி தெளிவாகப் புலனாகிறது. முதலாளித்துவத்தை ஏற்றுக்கொண்டு தமது சொந்த ஏகபோகங்களை உருவாக்கிக் கொண்ட ராஜ்யங்களும் இப்போது உள்ளன. இவற்றில் விசேஷமாக பிரேஸில், மெக்ஸிக்கோ, ஆர்ஜென்ரீனா, தென் கொரியா ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம், இவற்றின் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்கு வளர்முகநாடுகளிலேயே மேற்கொள்ளப்படுகிறது. இதே நேரத்தில் கைத்தொழில் வளர்ச்சி மிகவும் குன்றியவையும் வளர்முகநாடுகளிலேயே இருக்கின்றன.



பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க நாடுகள் முதலாளித்துவத்தின் செல்வாக்கின் கீழ் கொண்டுவரப்படாவிட்டால் இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டிருக்கவே முடியாது. முதலாளித்துவம் இப்பகுதிகளில் சில கைத்தொழில் நிலையங்களை நிறுவிவிட்டு பிரதானமான பொருளாதார, சமூக உறவுகளை தொட்டுப்பார்க்கமலே விட்டுவிட்டது. முதலாளித்துவமும் அது உருவாக்கிய கைத்தொழில் நிலையங்களும் அந்நாடுகளைச் சூறையாடியதுடன் தமது பொருளாதார மந்தநிலையையும், பொருளாதார தேக்கநிலையையும் அங்கு நிலைபெறச்செய்துள்ளன.

இதில் பிரதான குற்றவாளி புதிதாக விடுதலையடைந்த நாடுகளைத் தமது பொருளாதாரச் சார்புவலைக்குள் வீழ்த்தியிருக்கும் பல்தேசிய இணையங்களேயாகும். புதிய தொழிற்பகுப்பின் மூலம் அவை அவற்றை முதலாளித்துவமுறையுடன் உறுதியாகப் பிணைத்துவிட முயல்கின்றன, அத்துடன் தமக்குவேண்டிய மூலப்பொருட்களை விநியோகிப்பவர்களாகவும், அரை—உற்பத்தியாளர்களாகவும், மலிவான உழைப்பை வளங்குபவர்களாகவும், தமதுமுடிவுற்பத்திப் பொருட்களுக்கான சந்தையாகவும் இந்நாடுகளை அவை உபயோகித்து வருகின்றன, உயிரினச் சூழற்பாதுகாப்பிற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய கைத்தொழில் நிறுவனங்களையே பல்தேசிய இணையங்கள் வளர்முகநாடுகளில் நிர்மாணித்துள்ளன.

★ ★

வளர்முக நாடுகளில் பொருளாதாரப் பின்னடைவிற்கும், சமூக ஸ்திரமின்மைக்கும், அரசியல் குழப்பநிலைக்குமான பிரதான காரணிகளில் ஏகாதிபத்தியமும் ஒன்றாகும். புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் மக்களும், அவற்றின் அரசாங்கங்களும் இவற்றை மேன் மேலும் தெளிவாக உணர்ந்து வருகின்றன. இதனாற்தான் பொருளாதார சுதந்திரத்திற்கும், தமது இயற்கை வளங்கள் மீது தமது இறைமையை வலுப்படுத்துவதற்குமான போராட்டத்தினை அவை நடாத்த ஆரம்பித்துள்ளன.

சோஷலிஸ சமாஜத்தின் ஆதரவுடன் புதிய சர்வதேச பொருளாதார அணியொன்றை உருவாக்குவதற்கு வளர்முக நாடுகள் முயன்று வருகின்றன, இதன் நோக்கம் சர்வதேச முதலாளித்துவ தொழிற்பகுப்பு முறையில் உள்ள வளர்முக நாடுகளின் அசமத்துவ நிலைமைக்கு முடிவு கட்டுவதேயாகும்.

யூரி அலெக்ஸியெவ்
விஞ். வேட்பாளர் (பொருளியல்)

# ஆயுதப்பரிகரணத்தின் ஆதாயங்கள்

வளர்முக நாடுகள் உட்பட அனைத்து நாடு
களுக்குமான தற்போதைய சர்வதே
உறவுகளின் மிக அழுத்தும் பிரச்னைகளில்
போரும சமாதானமும் ஆயுதப் பரிகரண
மும் அபிவிருத்தியும உள்ளடங்குகின்றன

1980 இல் உலகின் வருடாந்த இராணுவச் செலவீ
னங்கள் 500,000 மில்லியன் டலர்களை அடைந்துள்ளன,
இது மொத்த உலக உற்பத்தியின் 6 சதவீதமாகும். வேறு
விதமாகக் கூறினால் உலக ஜனத்தொகையில் மூன்றில்
ஒரு பகுதி வாழும் ஆசிய, ஆபிரிக்காவின் வளர்முக நாடு
கள் யாவற்றினதும் மொத்தத் தேசிய உற்பத்தியின்
பெறுமதிக்குச் சமனான அளவில் இந்த இராணுவச் செலவீ
னங்கள் இருக்கின்றன. இத்தொகையானது முதலாளித்
துவ நாடுகளால் அபிவிருத்தித் தேவைக்கென உபயோகிக்
கப்படும் தொகையினை விட 17 மடங்கு அதிகமானதாகும்.

## ஆயுதப் போட்டியின் தாக்கங்கள்

இன்று பிரதேச ரீதியான, சேகமளாவிய ஆயுதப்
போட்டியின் விஸ்த்தரிப்பினைத் தெளிவாகக் காணக்கூடிய
தாக உள்ளது. உலறின் சமுத்திரங்கள், விண்வெளி,
கலோனியல் ஆதிக்கத்திலிருந்து அண்மையில் விடுதலை
பெற்ற நாடுகள் என்பவற்றிற்குக் கூட இது பரவிச்சென்
றுள்ளது இந்நாடுகளின் இராணுவச் செலவீனங்கள,
ஆயுதக் கொள்வனவுகள் என்பவற்றின் வளர்ச்சி இவற்றை
நன்கு புலப்படுத்துகின்றன. 1971 றகும் இடையில் வளர்
முக நாடுகளின் இராணுவச் செலவீனங்கள் 2.3 மடங்
காக வளர்ச்சியடைந்து 65,000 மில்லியன் டாலர்களை
எட்டியுள்ளன. உலக மொத்த இராணுவச் செலவீனங்
களில் வளர்முக நாடுகளின் பங்கு 1970ல் 7.4 சதவீத
மாகவும், 1979ல் 15.2 சதவீதமாகவும் உள்ளது,
யுத்தத் தேவைகளுக்கான செலவீனங்களையும், குடியி
யல் தேவைகளுக்கான செலவீனங்களையும் ஒப்புநோக்கும்
போது ஏகாதிபத்தியத்தில் திணிக்கப்பட்ட இராணுவ
மயப்படுத்தல் மக்களின் நல்வாழ்க்கைக்கு ஏற்படுத்தும்



பாரிய குந்தகத்தை நன்கு காணக்கூடியதாக உள்ளது.
இவ்வாறே, வளர்முக நாடுகளின் இராணுவச் செலவீ
னங்கள் அந்நாடுகளின் கல்வி, சுகாதாரம் என்பவற்றிற்
கான மொத்தச் செலவீனங்களையொத்த தொகையினை
உறிஞ்சி விடுகிறதையும் காணலாம். இதே நேரத்தில் இந்
நாடுகளின் ஜனததொகையில் 15 வயதிற்கு மேற்பட்டோ
ரில் 40 சதவீதத்தினர் கம்வியறிவற்றவர்களாக உள்ளார்
கள்; சராசரி 10,000 மக்களுக்கு 3 டாக்டர்களே உள்ளார்
கள்; 500 மில்லியனுக்கும் மேற்பட்டோர் போஷாக்கின்
மையால் துயருறுகிறுர்கள், ஐந்து வயதிற்குட்பட்ட
குழந்தைகளின் மரணத்தில் அரைப்பகுதி போஷாக்கின்மை
யாலேயே ஏற்படுகிறது.

மனித வலுவினை குடியியற் தேவைகளிலிருந்து இரா
ணுவத் துறைக்குத் திருப்பியுள்ளமை பொருளாதார
முன்னேறறத்திற்கும் பெரும் குந்தகத்தை ஏற்படுத்து
கிறது. ஆயுதப்படைவீரர்களின் எண்ணிக்கையின் அண்
மைக்கால வளர்ச்சி (இன்று இதன் மொத்தம் 26 மில்லிய
னக உள்ளது) வளர்முக நாடுகளின் ஜனத்தொகை
வளர்ச்சிவீதத்தை விஞ்சியதாக உள்ளது. 1963ல் 51 சத
வீதமாக இருந்த போர்வீரர்களின் வளர்ச்சி விகிதம்
1977ல் 59சதவீதத்தினை எட்டியுள்ளது. போர்வீரர்களில்
பாதிப்பேர் இராணுவ உற்பத்தித்துறையில் ஈடுபடுத்தப்
படுகிறுர்கள், தொழில்நுட்பத் திறன்வாய்ந்த இவர்களை
குடியியல் உற்பத்தித்துறையில் ஈடுபடச் செய்தால்
மாபெரும் அனுகூலங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

## ஆயுதப்பரிகரணமும் அபிவிருத்தியும்

இன்று வளர்முக நாடுகள் பலவற்றில் ஆயுதப் பரிகர
ணச் செயற்பாடுகளில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு
வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது, இவற்றின்
மூலம் சேமிக்கப்படும் பணத்தை தமது பொருளாதாரத்
தேவைகளுக்குப் பயன்படுத்தலாமென அவை கருதத்
தலைப்பட்டுள்ளன. வளர்முகநாடுகளின் இராணுவப்
பொருளாதார, இராணுவ அரசியற் செயற்பாடுகளின்
வளர்ச்சியும், உலகச் சக்திகளின் பொதுவான ஈர்ப்புடன்
உள்ள நேரடிப் பிணைப்பும் இந்நாடுகளை ஆயுதப் பரிகர
ணப் போக்கில் பங்குகொள்பவர்களாகியுள்ளன

நவீன உலகில் தனது உண்மையான நிலைபாட்டினைக்
கணக்கிற்கொண்டு இம்மார்க்கத்தில் வளர்முக நாடுகள்
செய்யும் பங்களிப்பு சர்வதேச மட்டத்திலான ஸ்திர
நிலையை உறுதிசெய்வதாக அமையும்.

உண்மையான சூழ்நிலைக்கிணங்க சகல நாடுகளும்
தமது பொறுப்புக்களை முழு மனிதகுலத்திற்கும முன்னு
ளுள்ள பொறுப்புக்களாக உணர்ந்து செயற்பட்டால்
மட்டுமே ஆயுதப்பரிகரணத்தில் மெய்யான முன்னேற

றத்தை அடையலாமென்ற உண்மையை சோவியத் ஒன்றியம் நன்கறிந்துள்ளது.

வளர்முகநாடுகளைப் பொறுத்தவரை இராணுவமயப் படுத்தலை ஒரு முடிவிற்குக் கொண்டுவருவதை இலக்காகக் கொண்ட செயற்பாடுகள், மக்களின் ஜீவாதார தேவைப் பாடுகளைத் திருப்தி செய்வதைநோக்கிய அபிவிருத்தி, பொருள்முதல், நிதி, மனிதவலு வளங்களைச் சிக்கனமாக உபயோகிப்பதனூடு சமூக பொருளாதார அபிவிருத்தியினை சமாதான வழ்முறையில் நடாத்திச் செல்லுதல் என்பன இராணுவ வரவு செலவுத்திட்டக் குறைப்புக்களைவிட முக்கியமானவையாகும்

ஆயுதப்பரிகரணத்திற்கும், அபிவிருத்திக்குமிடையிலே உள்ள தொடர்பு தனித்துவமான கோரிக்கைகளின் உதயத்திற்கு வழியமைக்கிறது. ஆயுதப்பரிகணச் செயற்பாடுகளிலிருந்து பெறப்படும நிதி இவற்றிற்குப் பயன்படுத்தப்படும்.

இந்தப் புதிய வகையிலான நிதியைக்கொண்டு தற்பொழுது உள்ள உதவித் திட்டங்களுடன் மேலதிகமான உதவித் திட்டங்களை மேற்கொள்ளலாம்,

ஏனைய நாடுகளிடமிருந்து அரசியல், இராணுவ, பொருளாதார அனுகூலங்களைப் பெறுவதற்கு இந்நிதியை உபயோகிக்கக் கூடாது. நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் காரணியாக இதனைப பிரயோகிக்கலாகாது. இந்நிதியினைப் பகிர்ந்தளிப்பதற்கான விதிகளும், விளக்கங்களும் ஆக்கப் படுதல் அவசியமானதாகும். இவ்விதிகள் சர்வதேச ஒப்பந்தமொன்றின் அடிப்படையில உருவாக்கப்படவேண்டும் இந்நிதியினை வளங்கும நாடுகள் தன்னிச்சையாக இவற்றை உருவாக்கக் கூடாது.

வளர்முக நாடுகளின் கடன்பழுவை மோசமாக்காத இலகுவான தவணைகளிலேயோ அலலது இலவசமாகவோ இந்நிதி அவற்றிற்கு வழங்கப்படலாம்.

''ஆயுதப்பரிகரண—அபிவிருத்தி'' பொறிமுறையின் செயற்பாடுகள் விசேஷமாக வடிவமைக்கப்படவேண்டும். இராணுவ வரவு செலவுத்திட்டக் குறைப்புக்களிலிருந்து பெறபபடும் நிதியினைப் பகிர்ந்தளிப்பதற்கான விசேஷ கமிட்டியொன்று உருவாக்கப்படவேண்டும்.

சமாதானம். ஆயுதப்பரிகரணம் ஆகியவற்றிற்கான போராட்டங்களில் வளர்முக நாடுகளின் செயன்முனைப்பான பங்குகொள்ளலும், சமாதானத்தை நேசிக்கும் நாடுகள் அனைத்தினதும் கூட்டுமுயற்சியும் ஆயுதப்போட்டியினைத் தடைசெய்யும் முயற்சிகளைத் தூண்டுவதற்கும், பந்தோபஸ்த்து, ஒத்துழைப்பு ஆகிய நிலைபாடுகளில் மனிதகுல முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கும் உதவியளிக்கும்.

# ஏகாதிபத்தியத்தின் சுயரூபம்

விளாதிமிர் அயோடான்ஸ்கி
விஞ். கலாநிதி (வரலாறு)

## செயலில் நியோ-கலோனியலிஸக் கொள்கை

தெஹிரானில் 1953ல் இடம்பெற்ற சதிமுயற்சியின் போது மொஹமட் முஸாடெக்கின் தலைமையிலான அரசாங்கம் தூக்கிவீசப்பட்டது. பிரதம மந்திரி கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து பலர் தலைமறைவானார்கள், பலருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது, இன்னுஞ் சிலர் நாடுகடத்தப் பட்டார்கள்.

இச்சதி நடைபெற்றுமுடிந்த சில நாட்களின்பின் ஈரானியத் தலைநகரிலுள்ள பல அவதானிகள் சி,ஐ.ஏ. உளவாளிகளே இதன் பின்னணியிலிருந்து செயற்பட்டதாகச் சந்தேகித்தார்கள்

இச்சந்தேகமெழுந்து நீண்ட நாட்களாகுமுன்பே உண்மை முழுமையாக வெளியாகியது: ஈரானிய நிகழ்வுகளில் சி. ஐ. ஏ. மட்டும் தனிமையாக ஈடுபடவில்லை, குறிப்பாக இதில் அக்கறைகொண்டுள்ள இன்னொரு இயக்கத்துடன் நெருக்கமாக ஒத்துழைத்தே இச்சதி நிகழ்த்தப் பட்டது—அந்த இயக்கம் ''பிரித்தானிய உளவுச் சேவை'' ஆகும். தங்கள் கூட்டு முயற்சியின் மூலம் ஈரானிய ஷாவை சிங்காசனத்தில் அமர்த்துவதில் அவர்கள் வெற்றிபெற்றார்கள் ஆனால் கடந்த ஆண்டு அவர் தூக்கிவீசப்பட்டார்.

## ஐக்கிய அமெரிக்காவின் அரசியற்சேவையில் பயங்கரவாதம்

தெஹிரான் சதி உலகளாவியமுறையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. தனது நலன்களுக்கு ஆபத்துநேருமென ஐக்கிய அமெரிக்கா உணருமேயானால் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீனமரிக்கா ஆகியவற்றின் புதிதாக விடுதலையடைந்த நாடுகளினதும், தமது தேசிய விடுதலைக்காக இன்னும் போராடிக்கொண்டிருக்கும் நாடுகளினதும் உள்நாட்டு விவகாரங்களில் அது மூர்க்க மாகத் தலையிடுமென்பதை இந்நிகழ்வு தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. ஈரானிய நிகழ்வுகளிலிருந்து இதனைமட்டுமின்றி வேறொரு பாடத்தையும் கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. வளர்முக நாடுகளின் தேசிய விருப்புக்கள் பற்றி ஐக்கிய

அமெரிக்க ஏகாதிபத்தியம் கொண்டுள்ள குரோத உணர்வே அதுவாகும். இத்துடன் இன்னொரு பாடமும் உள்ளது—இதுவும் குறைந்த முக்கியத்துவம் உள்ளதல்ல—தேசிய விடுதலை இயக்கங்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஏகாதிபத்தியச் சக்திகள் யாவும் நெருக்கமாக ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பதற்குச் சாத்தியமான தயார் நிலையே அதுவாகும்,

1950க்களில் இடம்பெற்ற ஈரானிய நிகழ்வுகள் இன்றும் பொருத்தமானவையாகவே உள்ளன, ஏனெனில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீனமரிக்கா ஆகியவற்றின் புதிதாக விடுதலையடைந்த நாடுகளை நோக்கிய வாஷிங்டனின் கொள்கையில் கடந்த ஆண்டுகளில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படவில்லை. வளர்முக நாடுகளின் தேசிய அபிலாஷைகளைப் புறக்கணிப்பது, அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடுசெய்யத் தயார் நிலையில் இருப்பது என்பவற்றை இக்கொள்கை உள்ளடக்கியுள்ளது.

தேசிய விடுதலை இயக்கங்கள், புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் என்பவற்றின் தலைவர்களுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க உளவுச் சேவை பரவலாகக் கட்டவிழ்த்துவிட்ட தனிநபர் பயங்கரவாதச் செயற்பாடுகள் நன்கறியப்பட்டவையே. ஐக்கிய அமெரிக்கா சாதாரண குடிமக்களுக்கெதிராக கூட்டுமொத்தப் பயங்கரவாதத்தையும் பலதடவை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதில் மிக ஆபத்தான விஷயம் எதுவெனில், இப்பயங்கரவாதச் செயற்பாடுகள் தனிநபர்களின் கவனயீனங்களாலோ அல்லது பொறுப்பின்மையாலோ ஏற்படவில்லை, பதிலாக திட்டமிடப்பட்ட தேசியக் கொள்கையிலிருந்தே இவை உற்பத்தியாகின்றன என்பதுவேயாகும். வளர்முக நாடுகளை அடிமைகொள்வதற்கான ஏகாதிபத்திய தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாகிய ராஜ்ய தந்திரோபாயத்தின் ஓர் உதாரணமே இதுவாகும்,

புதிதாக விடுதலையடைந்த நாடுகள், தேசிய விடுதலைக்காகப் போராடும் சக்திகள் என்பவற்றிற்கு எதிராக ஏகாதிபத்தியச் சக்திகள் புரிந்துள்ள குற்றச்செயல்களின் பட்டியல் மிக நீளமானது. ஏகாதிபத்திய வட்டாரங்கள் வளர்முக நாடுகளிலுள்ள ராஜ்யவாதிகள், அரசியற் தலைவர்கள், பிரமுகர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

பிறிலிமோ தலைவராகிய எடுவார்டு மொன்ட்லேன் தனக்கு வந்திருந்த புத்தகப் பார்ஸலொன்றைப் பிரிக்கும்போது அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததனால் கொல்லப்பட்டார். பற்றிஸ் லுமும்பாவின் அரசாங்கத்திற்கு எதிராக இராணுவ சதித்திட்டமொன்று சி. ஐ. ஏ.யினால் தீட்டப்பட்டு அவர் படுகொலைசெய்யப்பட்டார். கொங்கோ மக்கள் குடியரசின் புகழ்பெற்ற



ராஜ்யவாதியான மேரியன் நிச்குவாயி ஏகாதிபத்திய உளவாளிகளினால் கொல்லப்பட்டார். சிலியின் ஜனாதிபதி சர்வடோர் அலெண்டேக்கு நிகழ்ந்தது என்றென்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும். கியூபாப் புரட்சியின் தலைவரான பெடல் காஸ்ரோவை படுகொலைசெய்வதற்கு பல தடவைகள் சி.ஐ.ஏ. சதிமுயற்சிகளை நடாத்தியது.

ஐக்கிய அமெரிக்காவின் அதிபுத்திசாலிகள் ஒரே நேரத்தில் பல இலக்குகளை அடைவதற்கு முயற்சிக்கிறார்கள் அண்மைக் காலத்தில் மேற்குலகில் பயங்கரவாத அலையைத் தூண்டிவிட்ட அவர்கள் வளர்முக நாடுகளின் மக்களிடையே இனவாதப்போக்குகளையும் தூண்டிவிடுகிறார்கள். இவற்றின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களைத் தவறாக வழிநடாத்தி அவர்களின் தற்காலிக அனுதாபத்தைப் பெறுவதன் மூலம் வளர்முகநாடுகளில் தமது திட்டங்களை ''சரிப்படுத்துவதற்கும்'' அவர்கள் முனைகிறார்கள். இதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்கா ''சர்வதேச பயங்கரவாதத்திற்கு'' எதிராகப்பேசிக் கொண்டே ஆசிய, ஆபிரிக்க லத்தீனமரிக்காவின் சமாதானத்தை நேசிக்கும் மக்களுக்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஏனைய ஏகாதிபத்தியச் சக்திகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பை மேற்கொள்வதற்காக கடுமையாக உழைத்தும் வருகிறது.

## பிற்போக்கு அணிகளுக்கு ஆதரவு

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகில் பல பகுதிகளில் தனக்கு நம்பிக்கையான அரசியற் தலைவர்களும், சமூகச் சக்திகளும் அதிகாரத்திற்கு வருவதற்குப் பாதை அமைத்துக் கொடுப்பதற்கென பயங்கரவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க வளர்முக நாடுகளை நோக்கி ஐக்கிய அமெரிக்கா கடைப்பிடித்துவரும் கொள்கையின் வேறொரு பொதுவான தோற்றப்பாட்டினை கடந்த சில மாதங்களாக அவதானிக்க முடிகிறது ஆயுதப்படைகளை வெளிப்படையாகவே அதிகரித்துவருவதே அதுவாகும். சிலபோது ஆயுதங்களையும், இராணுவ ஆலோசகர்களையும் வழங்குவதை இலக்காகக்கொண்டிருக்கும் வாஷிங்டன் அதேபோது இராணுவத்தளங்களை அமைக்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தியும், ஆயுத வலிமையினைப் பரிசோதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டும் இராணுவ ஒப்பந்தங்களை மேற்கொண்டும் வருகிறது. இந்த இராணுவவாதப் போக்குகள் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்திய வட்டாரங்களின் ஆக்கிரமிப்பு விருப்புக்களையும், உலக மேலாதிக்க வேட்கையினையும் நன்கு பிரதிபலிக்கின்றன. இதே நேரத்தில் வளர்முக நாடுகளில் இராணுவக் காவல்நிலைய முறையொன்றினை உருவாக்குவதன் மூலம் ஏகாதிபத்திய விரோத வெகுஜன எழுச்சிகளை அடக்குவதற்கும், அந்நாடுகளின் விவகாரங்களில் ஆயுத ஊடுருவல்களை நிகழ்த்து

வதற்கும் ஏற்ற சந்தர்ப்பமொன்றினை உருவாக்குவதற்கு ஐக்கிய அமெரிக்கா பெரிதும் முயன்று வருகின்றது.

ஐக்கிய அமெரிக்க வெளிநாட்டுக்கொள்கையில் மத்திய கிழக்கு விவகாரம் பிரதான இடத்தினை வகித்து வருகிறது. அரபு நாடுகளைப் பிரித்து அவற்றை நலிவுறச் செய்து தனது இராணுவ நடமாட்டத்தினை விஸ்த்தரிப்பதன் மூலம் அவற்றின் உள்நாட்டுச் சூழ்நிலையை ஐக்கிய அமெரிக்கா மோசமடையச்செய்து வருகிறது.

ஐக்கிய அமெரிக்கா பாரஸீகக் குடாவினை ''அமெரிக்க நலன்களுக்கான ஜீவாதார பிரதேசம்'' எனப் பிரகடனப் படுத்தியுள்ளது. தனது இராணுவச் செயற்பாடுகளை விஸ்த்தரிப்பதன் மூலம் அராபிய நாடுகளின் மீது தனது பழைய நெருக்கடி வளையத்தினை'' மீண்டும் உருவாக்க வாஷிங்டன் முனைந்து வருகின்றது. ஆனால் இதே நேரத்தில் இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகியவற்றை நோக்கிய தனது கொள்கைகளுக்கு ஆதரவான தளமொன்றினை அது எதிர்நோக்கியுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டே வாஷிங்டன் பாகிஸ்த்தானுக்கான தனது ஆயுத விற்பனையை விஸ்த்தரித்து வருகிறது. இந்நாட்டின் பிரதேசத்தை உபயோகித்து மத்திய கிழக்கு, தென்மேற்கு ஆசிய நாடுகளில் ஊடுருவல்களை நிகழ்த்துவதற்கு ஐக்கிய அமெரிக்கா பெரிதும் விரும்புகிறது. தற்போதைய சூழ்நிலையில் ஆப்கானிஸ்தான் எதிர்ப்புரட்சிக் குழுக்களுக்கு அமெரிக்க ஆயுதங்களை விநியோகிப்பதற்கான ஒரேயொரு மார்க்கம் பாகிஸ்த்தானே என ஐக்கிய அமெரிக்க நிர்வாகபீடம் கருதுகிறது.

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்திய வட்டாரங்கள் இந்துசமுத்திர பிராந்தியத்தை இராணுவப் பதட்டநிலை நிலவும் ஒரு பிரதேசமாக மாற்றமுனைவனை பல ஆசிய. ஆபிரிக்க நாடுகளிலுள்ள ராஜ்யவாதிகள் தெளிவாக அறிந்துள்ளார்கள். ஐக்கிய அமெரிக்காவின் இம்முற்சியகளுக்கு இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் பலவற்றின் அரசாங்கங்களிடமிருந்தும். அரசியற்கட்சிகளிடமிருந்தும், பொதுமக்களின் இயக்கங்களிலிருந்தும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. 1981 பெப்ருவரியில் நியூடெல்லியில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் மகாநாட்டில் இந்தியத் தூதுக்குழு உட்பட பல தூதுக்குழுக்கள் இந்துசமுத்தில் வாஷிங்டனின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை வன்மையாகக் கண்டித்ததுடன் டியர்கோ கார்ஸிய தீவிலுள்ள ஐக்கிய அமெரிக்க இராணுவத் தளத்தை அகற்றவேண்டுமென்றும் குரலெழுப்பின.

மேற்கூறியவை யாவும் வளர்முக நாடுகளை நோக்கிய வாஷிங்டனின் அணுகுமுறையைத் தெளிவாக எடுத்துக் காட்டும் ஒரு சில உண்மைகளேயாகும். அதனுடைய கொள்கையின் பழைய பாரம்பர்ய காரணிகளுடன் சில புதிய அம்சங்களும் இணைந்துள்ளன

மெஷ்டுனரோட்னயாஸின், இல, 6, 1981



# சர்வதேச பயங்கரவாதம்: அதன் மூலமும, நோக்கமும்

1973ல் சிலியில் நடந்த திடீர்ப்புரட்சியும் சட்டரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சர்வதோர் அலண்டே யின் படுகொலை, இததாலியின் பொலொக்னு ரயில் நிலையத்தில் பல உயிர்களைக் காவு கொண்ட அட்டூழியம், ஆயுதக் கும்பல்களைப் பயிற்றுவித்து ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பியது; அமெரிக்காவின் வெளிநாட்டு தூதுவராலயங்கள் மீது யூத பாதுகாப்புப் படையினர் வேண்டுமென்றே செய்த தாக்குதல்.. ...

இவையெல்லாம் ஏகாதிபத்தியத்தின் நிதியுதவியுடன், வழிப்படுத்தப்பட்ட ஒரு சில சர்வதேச பயங்கரவாத நிகழ்வுகளாகும். இன்றைய கட்டத்தின் இந்த எரியும் பிரச்னைபற்றி ''நியூ டைம்ஸ'' பத்திரிகையாளர் விக்டர் கிரிபாச்சொவ். ஜனநாயக வழக்கறிஞர்களின் சர்வதேச சங்கத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் ஈகொர் கார் பெட்ஸ எல். எல். டி. அவர்களுடன நடத்திய பேட்டியே இது

கே: உலக அரங்கில் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்க்கும் மையச் சக்தியாகத் தமது கொள்கை அமையுமென அமெரிக்காவின் புதிய நிர்வாகம் அறிவிக்குமென சிலர் எதிர்பார்த்தார்கள். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இது பாராட்டத்தக்கதாகத் தோன்றலாம். உண்மையில் இது தூண்டுதல் நடவடிக்கைக்கான போர்வையா?

பதி: நேரடியாகவே சொல்வதானல், சோவியத் யூனியன், மார்க்ஸிஸ—லெனினிய சித்தாந்தம், உலக கம்யூனிஸ இயக்கம், தேசிய விமோசன இயக்கம், என்பவற்றிக்கெதிராகவெல்லாம் பெருமளவு பிரசாரத்தை அமெரிக்க நிர்வாகம் கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பதே

உண்மை இதற்காகவே அமெரிக்கத் தலைவர்கள் ''சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்ப்பது'' என்ற கோஷத்தை மேற்கொள்கிறார்கள்.

இதில் புதிதாக ஒன்றுமில்லை. புரட்சிகர நடவடிக்கைகளை பயங்கரவாதம் எனக் கூறுவதும், பயங்கரவாதத்தை மார்க்ஸிஸ தத்துவத்துடன் சம்பந்தப்படுத்துவதும்கூட முன்னரே நடந்தவைதான். புரட்சிகர இயக்கத்துடன் பயங்கரவாதம் ஒத்துப்போகாது என்பதை லெனின் தனது காலத்தில் வலியுறுத்தினார்.

லெனின் மறைந்த பின் இருபதுகளின் நடுப்பகுதியில் பயங்கரவாதத்தை தொழிலாள வர்க்க இயக்கத்துடன் இணைத்துவிட மேற்குலகு முனைந்தது இதற்கெல்லாம் காரணம் வெளிப்படையானதே. மற்றவர்களுக்கெதிராக வன்முறையையே பிரயோகிக்கும் பூர்ஷுவாக்கள் ஏனைய சுரண்டும் வர்க்கங்களைப்போல தனக்கெதிராகவும் வன்முறை பிரயோகிக்கப்படுமோ என அச்சமடைகின்றனர்.

கே: அமெரிக்காவின் ''பயங்கரவாத விரோத தந்திரோபாயம்'' பற்றி தங்கள் கருத்து?

பதி: ''ரெடி மேட்'' பயங்கரவாதத்தைப் பாரிய அளவில் ஏற்றுமதி செய்வதிலேயே அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. லத்தீனமெரிக்க நாடுகளில் பயங்கரவாத நடவடிக்கைகளும் இயக்கங்களும் அமெரிக்காவினாலேயே ஆதரிக்கப்பட்டும், நிதியுதவியளிக்கப்பட்டும், தூண்டப்பட்டும் வந்தன என்று 1976ஆம் ஆண்டுகளிலேயே லண்டனிலிருந்து வரும் ''கார்டியன்'' எழுதிற்று. அதற்குமேலாக, தமது சொந்த நாட்டிலேயே மக்களைச் சுட்டுத் தள்ளும் பயங்கரவாதிகளும் அமெரிக்காவில் விசேட பயிற்சி பெற்றவர்களே.

ஒரு விதத்தில் வாஷிங்டனின் அயல்நாட்டுக்கொள்கைகூட உத்தியோக பூர்வமான பயங்கரவாதம் எனக்கூறலாம். வியத்னாமில்போல, சில வேளைகளில் அது நேரடி ஆக்கிரமிப்பாயிருக்கிறது. தேசிய விமோசன இயக்கங்களை ஒடுக்க கூலிப்படைகளைப் பாவிப்பதும் இத்தகையதே.

பயங்கரவாதத்தை இன்று இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று—ஏகாதிபத்திய அமைப்பை அடிப்படையில் பாஸிஸ வகை பயங்கரவாத வலதுசாரிகள் இரண்டு—இடதுசாரி பயங்கரவாதம் அது தேசிய விமோசன மற்றும் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சியை தடைப்படுத்துகிறது. வலதுசாரி பயங்கரவாதத்தைப் போலவே இடதுசாரி அட்டூழியங்களும் ஏகாதிபத்திய பிற்போக்குவாதிகளின் கைகளின் பாவைகளாகவே இருக்கின்றன.

கே: அது எப்படி? இது, பரஸ்பரம் பிரத்தியேகமான புரப்பாடில்லையா?



பதி: மேற்பார்வைக்கே அப்படித் தோன்றலாம். பயங்கரவாதம் இன்று பல வடிவங்களையெடுக்கிறது. விமானக் கடத்தல், முற்போக்கான ஸ்தாபன கட்டிடங்களில் குண்டுகளை வைப்பதற்குப் பணயக் கைதிகளை நிர்ப்பந்திப்பது போன்றவையாய் அவை அமைகின்றன.

வலதுசாரி பயங்கரவாதிகள் ''ரெடிமேட்'' பாஸிஸ சித்தாந்தங்களை—பிரதானமாக ஹிட்லரின் ''மெய்ன் கேம்ஃப்''க் கொணடுள்ளனர். சிலியின் பயங்கரவாத சர்வாதிகாரியான பினோசெட் கூட ஹிட்லரின் புத்தகத்தைப்போல ஒன்றை எழுதியிருக்கிறார்.

வலதுசாரி பயங்கரவாதம் எப்போதும், எங்கும் முன்னேற்றத்திற்கும் ஜனநாயகத்திற்கும் எதிரான ஆயுதமாகவே இருக்கிறது. தேசிய விமோசன இயக்கத்தை ஒடுக்கவும், சோஷலிஸ நாடுகளுக்கு விரோதமாகவுமே இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் அரசியல் மற்றும் வெகுஜனத் தலைவர்களைப் படுகொலை செய்கிறார்கள். சோவியத் ராஜதந்திரிகளான வட்ஸ்வாவ் வொரொவ்ஸ்கி, பியதோர் வொய்கோவ், ஓர்லண்டோ லெடிலியர் ஆகியோரின் படுகொலைகள் மற்றும் பிடல் காஸ்ட்ரோவின் உயிரைப் பறிக்கும் எத்தனம் என்பனவெல்லாம் இவற்றற்கான ஒரு சில உதாரணங்களே.

சிலியில் மட்டுமல்ல ஏனைய அரசாங்கத் தலைவர்களாகவும் பயங்கரவாதிகளுள்ளனர். இஸ்ரேலிய பிரதமர் பெகின் ஒரு உதாரணம்.

வலதுசாரி பயங்கரவாதத்திற்கு முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கலில் நடந்த 'கார்னேஷன் புரட்சிக்கு'ப் பின் பாஸிஸ பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது. பழைய முறையை தூக்கிப்பிடிக்கும் சட்டபூர்வமான அரசியல் குழுக்களின் பக்கபலம் இருப்பதால் பாஸிஸ வன்முறையை எதிர்ப்பது கஷ்டமாயிருந்ததென அந்நேரத்தில் முற்போக்காளர்கள் சுட்டிக்காட்டினர். இத்தாலியில் நடந்த பயங்கரவாதம் அமெரிக்க தூண்டுதலினாலானதென்பது வெளிப்படை.

மிக முனைப்பானதும் தேர்ந்ததுமான இடதுசாரி வகையினதைப் போல வலதுசாரி பயங்கரவாதமும் இருப்பதே இன்று அபாயகரமானதாகும். அது தனது குரூரத்தன்மை, பயனின்மையால் பொதுமக்களை தூரத்தள்ளிவிடும் இவர்கள் தமது உரிமைகளுக்கான மக்கள் போராட்டத்தையும் திசைதிருப்புகிறார்கள், தனிமைப்படுத்துகிறார்கள்.

நியாயமன்ற எதிர்ப்பிற்கு ஒரு வழியாக வன்முறைக்கு ஒரு தலைப்பட்சமான இடதுசாரிகளின் விருப்பத்தை இலகுவாகவே பிற்போக்கின் வழிக்கு வழிநடத்திவிடலாம். பிரேஸிலிய மரிகெல்லா உணர்வு பூர்வமாகவே கூறியதைப் போல இடதுசாரி பயங்கரவாதிகளின் நோக்கம் சமுதாயத்தின் வாழ்வைத்தாறுமாருக்குவதேயாகும். எனவே, இரண்டுமே பிற்போக்கிற்கே சேவகம் செய்கின்றன எனக் கூறுவதற்கு எல்லா நியாயங்களுமுண்டு.

கே: 1972 ஐ நா 27வது பொதுச் சபைக் கூட்டத்தில் சர்வதேச பயங்கரவாத பிரச்னை எழுப்பப்பட்டது. அப்போது எல்லாவித பயங்கரவாதத்துக்குமெதிராக சோவியத் யூனியன் குரல்கொடுத்தது; பயங்கரவாதம் தொடர்பான பிரேரணையில் சர்வதேச பயங்கரவாதத்திற்கும் வாழ்க்கை நிலைமைகளால் உண்டு பண்ணப்பட்ட வன்முறை நடவடிக்கைகளுக்குமிடையே சரியான வரையறுப்பிடப்பட்டதல்லவா?

பதி: சோவியத் யூனியன் பயங்கரவாதத்தை அன்றும், இன்றும், என்றும் எதிர்க்கும். அது சர்வதேச குற்றச் செயலாகக் கணிக்கப்படவேண்டுமென்றும், இன ஒதுக்கல், இனச் சங்காரம் மற்றும் ஏகாதிபத்தியத்தால் தூண்டிவிடப்படும் ஏனைய பயங்கர குற்றங்களையெல்லாம் போலவே இந்தப் பிரச்னையிலும் தெளிவான கருத்து வெளிப்படுத்தப்படல் வேண்டும். இது ஐ. நா. பொதுச் சபையே கூறிய கருத்தாகும்.

பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் விதிப்பது இலகுவானதல்ல என்று நாம் உணர்கிறோம். தேசிய விமோசன இயக்கத்துடன் இணைப்பதற்காக ''பயங்கரவாதம்'' என்பதை உருச்சிதைப்பவர்களால் ஏற்கனவே எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன, தெரிவிக்கப்படுகின்றன. ''பயங்கரவாதம்'' என்பதுபற்றி உலகளாவிய ஒரு கலந்துரையாடலுக்கு அமெரிக்க நிர்வாகமே முன் முயற்சி எடுத்துள்ளதால் உண்மையில் பயங்கரவாதம் என்றால் என்ன, அதன் வேர்கள் எவை, அது எவரின் நலனுக்கு சேவகம் செய்கிறதென்றெல்லாம் விளக்கவேண்டியுள்ளது.

அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஆரவாரமானது, வரலாற்றில் முன்னர் நடந்துள்ளதைப்போல, அதை ஆரம்பித்தவர்களையே திருப்பித் தாக்குமென்றே நான் நம்புகிறேன். ஆரம்பத்தில் ஏனைய பிரசாரங்களைப் போலவே இதுவும் சிலரை திசை திருப்பலாம். ஆனால் நீண்டகாலத்திற்கல்ல. உண்மையில் சர்வதேச பயங்கரவாதத்தைத் தூண்டுபவர் யார், அதன் தலைவர்கள் யார் என்பதை மக்கள் அறியத் தொடங்கியுள்ளனர்.



# முஸ்லீம்களுக்கு எதிராக இஸ்லாமின் ''நண்பர்கள்''

தாம் முஸ்லீம்களின் ''நண்பர்கள்'' எனவும், ''பாதுகாவலர்கள்'' எனவும் நிரூபிப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவின் பிரச்சாரகர்கள் முழுமுனைப்பாக ஈடுபட்டு வருகிறார்கள். நாட்டின் உயர் அதிகாரிகள் பிரச்சார சாதனங்களுக்கு அப்பால் சென்று செயன்முனைப்பாக இந்நடவடிக்கைகளை ஆற்றிவருகிறாகள்

முஸ்லிம் நாடுகளின் மக்களை இந்தக் கட்டுக் கதைகளாலும், இதுபோன்ற ஏனைய பொய்யுரைகளாலும் தவறான வழியில் இட்டுச் செல்லமுடியாது. எகிப்து சுவெஸ் கால்வாயை தேசியமயமாக்கத் தீர்மானித்தபோது மேற்கத்திய வல்லரசுகள் எடுத்த நிலைபாட்டினை இன்னும் மக்கள் பசுமையாக நினைவிற் கொண்டுள்ளார்கள். அப்போது வாஷிங்டன் எகிப்தியர்களுக்கான தானிய விநியோகத்தைத் தடைசெய்து பசியின்மூலம் அவர்களைப் பயமுறுத்த முனைந்தது. இந்தச் சிக்கலான காலகட்டத்தில் சோவியத் ஒன்றியத்தைத் தவிர வேறெந்த நாடுமே அவர்களுக்கு உதவ முன்வரவில்லை. 1956ல் நிகழ்ந்த முக்கூட்டு ஆக்கிரமிப்பின்போது சோவியத் ஒன்றியம் எகிப்தின்பக்கமே நின்றது. சோ. சோ. கு. ஒ. வின் உறுதியான நிலைபாட்டினால் ஆக்கிரமிப்பாளர்கள் வாபஸ் பெறவேண்டியிருந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் இராணுவ, நிதி, பொருளாதார உதவிகளைப்பெற்றுவரும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் பின்விளைவுகளை ஒழிப்ததற்காக முயன்றுவரும் அராபிய முஸ்லீம் மக்களுக்கு சோவியத் ஒன்றியம் உறுதியான ஆதரவை வழங்கி வருகிறது. இந்த உண்மைகள் எதையும் யாரும் மறுக்கமுடியாது.

சோ.க.க. வின் 26வது காங்கிரஸிற்கு அனுப்பி வைத்துள்ள தனது வாழ்த்துச் செய்தியில் லெபனான் முற்போக்குச் சோஷலிஸக் கட்சியின் உபதலைவரான மோஸன் தலூலா பின்வருமாறு கூறினார்: ''சகல ஏகாதிபத்தியச் சதிமுயற்சிகளையும் முறியடிப்பதில் வலுமிக்க நண்பனாக

வும், சக்திமிக்க ஆதரவாளனாகவும் சோவியத் ஒன்றியம் இருந்துவருகிறதென்று உலகிலுள்ள சமாதானத்தை நேசிக்கும் மக்கள் யாவரும் கருதுவதைப் போலவே நாமும் கருதிவருகிறோம்.''

## ஐக்கிய அமெரிக்கா: இதனுடைய மெய்யான குறிக்கோள்

கடந்த ஆண்டு ''பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக'' ஈரானில் ஐக்கிய அமெரிக்கா ''முஸ்லீம்களின் நண்பன்'' என்ற வாஷிங்டன் பிரகடனத்தின் ''பெருமதியை'' மீண்டும் ஒருமுறை, துலாம்பரமாக்கியது. தரைப்படையினரைச் சுமந்து வந்த ஐக்கிய அமெரிக்க இராணுவ விமானம் விபத்துக்குள்ளாகியதால் ஈரான் இரத்தக்களரியிலிருந்து ''தற்செயலாகத்'' தப்பிக்கொண்டது.

ஆப்கான் நிகழ்வுகளைச் சாட்டாக வைத்து முஸ்லீம் நாடுகளிலுள்ள பிற்போக்குச் சக்திகளை கம்யூனிஸ விரோத சுலோகத்தின்கீழ் ஒன்றுதிரட்டுவதற்கும், அந்நாடுகளைச் சோஷலிஸ சமாஜத்திற்கெதிராகத் திசைதிருப்பி விடுவதற்கும் வாஷிங்டன் முயன்றுவருகிறது. முன்னைநாள் பாதுகாப்பமைச்சின் செயலாளராகிய ஹரல்ட் பிறவுண் அண்மை, மத்திய கிழக்கில் ஐக்கிய அமெரிக்கா இராணுவத் தயாரிப்புக்கள் பற்றி நியூயோர்க்கிலுள்ள வெளிநாட்டுறவுகள் கவுன்ஸிலில் ஆற்றிய உரையின்போது இதுபற்றிக் குறிப்பிட்டார். முஸ்லீம் மதத்தைப் பின்பற்றும் மக்கள் வாழும் இந்தப் பரந்த பிரதேசத்தின் சமாதானத்திற்கும் பந்தோபஸ்த்திற்கும் இங்கிருந்துதான் உண்மையான பயமுறுத்தல் விடுக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் அமெரிக்கா காட்டிவரும் அக்கறையை பிரவுண் வெளிப்படையாகவே விபரிக்கின்றார்: தாம் பெறும் எண்ணெய் வளங்களை உறுதிசெய்வதற்காகவே இந்த அக்கறை காட்டப்படுகிறது. பிறவுண் இதற்கும் மேலே சென்று அண்மை. மத்தியகிழக்கு முஸ்லீம் நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெயைப் பங்கீடும் செய்கிறார். இந்தக் ''கருந்தங்கத்தில்'' 45 சதவீதத்தை ஐக்கிய அமெரிக்காவிற்கும், 13 சதவீதத்தை ஜேர்மன் சமஷ்டிக் குடியரசிற்கும், எஞ்சியுள்ள சதவீதத்தை ஜப்பானிற்கும் மற்றும் ஏனைய சில மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பங்கிட்டுள்ளார். இதன் உண்மையான உடைமையாளர்களான முஸ்லீம் நாடுகளுக்குக்கூட அவர் ஒரு சிறிய சதவீதத்தை ஒதுக்கீடு செய்துள்ளமை பெரும் வியப்பைத் தருகிறது. சவூதி அரேபியா, குவெய்த், ஈரான், ஈராக் மற்றும் ஏனைய முஸ்லீம் நாடுகளின் இயற்கை வளங்கள் மீது ஐக்கிய அமெரிக்கா கொண்டுள்ள ஏகாதிபத்திய, கலோனியலிஸ மனோநிலையை இது தெளிவாக எடுத்துக்



காட்டுகிறது. தமது காய்கறித் தோட்டத்தில் காய்க்கும் பழத்தைப்பற்றிக் கதைப்பதுபோல ஈரானின் எண்ணெயைப்பற்றி ஐக்கிய அமெரிக்காவில் கதைத்துக்கொள்கிறார்கள். தமக்குச் சொந்தமானது எது, சொந்த மற்றது எதுவென்றுகூட வாஷிங்டனுக்குத் தெரியவில்லைப் போலிருக்கிறது.

ஏகாதிபத்திய, கலோனியல் மேலாதிக்கத்தினால் துயருறும் நாடுகளில் கடந்த தஸாப்தத்தில் பிரதான அபிவிருத்திகளோ, மாற்றங்களோ ஏற்படாதிருப்பதை நாம் காண்கிறோம், இது ஏகாதிபத்தியத்தின் ஓர் இயல்பேயாகும்.

ஒரு காலத்தில் கெய்ஸர் ஜேர்மனிகூட தன்னை இஸ்லாத்தின் ''பாதுகாவலனாக'' காட்டிக்கொண்டது, இந்தப் பொய்த்தோற்றத்தின் மூலம் ஒட்டாமன் ஏகாதிபதியையும் அண்மை, மத்தியகிழக்கு நாடுகளையும் அது ஏப்பம்விடப் பார்த்தது. முஸ்லீம் நாடுகளின் ''போஷகர்'' என்ற முகமூடியின் கீழ் இன்று அதேபாத்திரத்தை வாஷிங்டன் வகிக்கப் பார்க்கிறது, இதற்காக தென்மேற்கு ஆசியாவில் தனது நடமாட்டத்தினை அது அதிகரித்துள்ளது. ஐக்கிய அமெரிக்க ராஜாங்கச் செயலாளராகிய அலெக்ஸாண்டர் ஹெய்க் அண்மைச் கிழக்கு நாடுகளுக்கு தான்மேற்கொண்ட விஜயத்தின்போது இந் நடமாட்டத்தை வலியுறுத்தியுள்ளார்.

## கண்டனச் செயற்பாடுகள்

1967 ஜூன் மாதத்தில் அராபிய நாடுகளுக்கெதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை உத்தியோகபூர்வமாக ஆதரித்தவர்கள் இப்போது இஸ்லாமின் பாதுகாவலர்களெனப் பாசாங்கு செய்வது முற்றிலும் விந்தையாக இருக்கிறதென அல்ஜீரிய வெளிநாட்டமைச்சர் எம்.பெனி யாஹியா ,'ஐரோப்பா—1'' வானொலி நிலையத்தில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய அமெரிக்காவும், அதனுடைய நட்பு நாடுகளும் ஈரானிய, ஆப்கானிஸ்தான் நிகழ்வுகளைச் சாதகமாக்கிக்கொண்டு அராபிய நாடுகள்மீது காம்ப் டேவிற் ஒப்பந்தத்தைத் திணிப்பதற்கும் அதன் மூலம் இப்பிரதேசத்தில் இஸ்ரேலினதும், ஐக்கிய அமெரிக்காவினதும் செல்வாக்கை நிலைநாட்டுவதற்கும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருவதாக தேசிய போராட்ட முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

வாஷிங்டன் இராணுவ வெறியாட்டங்களையும், ''சோவியத் பயமுறுத்தல்'' பிரச்சாரங்களையும், முஸ்லீம் தலைவர்களை மூளைச்சலவைக்குட்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டது, ஆனால் இவையெல்லாமே வாஷிங்டனின்

எதிர்பார்ப்புகளுக்கு முரணான விளைவுகளை ஏற்படுத்தின. பாலஸ்தீன பிரச்னை, தெற்கு லெபனான், சினாய், கோலான் பிரச்னைகள் என்பவற்றை மறந்துவிட்டு ஆப்கானிஸ்தானில் ''இஸ்லாமைப் பாதுகாப்பது'' பற்றி ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் எப்படித்தான் கூக்குரலிடுகிறது என்பதுபற்றி முஸ்லீம் தலைவர்கள் வியப்படைகிறார்கள். முஸ்லீம்களின் புனித ஸ்தலமாகிய ஜெருசலத்தை இஸ்ரேலுடன் இணைத்துக்கொள்ள வாஷிங்டன் உதவுவதேன்? சமாதான வேட்கையுள்ள முஸ்லீம் குடிமக்களைக் கொன்றொழிப்பதற்காக இஸ்ரேலுக்கு குண்டுகளை விநியோகஞ் செய்வது ஏன்?

சோவியத் ஒன்றியத்தைப் பொறுத்தவரை அது சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடில்லாமல் நடந்து வருகிறது. தமது சொந்தத் தலைவிதியை தாமே தீர்மானிக்கும் உரிமைக்காகவும், ஏகாதிபத்திய மேலாதிக்கம், சுரண்டல் என்பவற்றிற்கு எதிராகவும் போராடும் முஸ்லீம்கள் யாவருக்கும் அது தனது ஆதரவினைத் தெரிவித்து வருகிறது.

''சவெற்ஸ்கயா ரொசியா'' பத்திரிகையிலிருந்து.

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

076027

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பட்டது

சோஷலிஸம்
தத்துவமும் நடைமுறையும்

இம் மாத சஞ்சிகையைப்
பெற பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்!

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி-அச்சகம் 93, மாளிகாகந்த ரோட், கொழும்பு-10